Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-16 | 02-10-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-227




# தமிழர் தாயக கத்தோலிக்க மறை மாவட்டங்கள் தனி அலகாக இணைந்து செயற்பட முயற்சி

## வீரச்சாவு

நேற்று முன்தினம் மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினரால் சுடப்பட்டு நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் யோக்குமார் (கிருஸ்ணபிள்ளை.யோக்குமார், தாண்டவன் வெளி மட்டக்களப்பு, த.மு.கொக்கட்டிச்சோலைமட்டக்களப்பு) என்பவரே வீரச்சாவடைந்தவராவார் இவருக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## யாழ். ஆயர் பாப்பரசரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**தமிழர் தாயகப் பிரதேசத்திலுள்ள கத்தோலிக்க மறை மாவட்டங்கள் தமக்குள் இணைந்து தனியலகாகச் செயற்படும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் இது தொடர்பான கோரிக்கையை யாழ்ப்பாண ஆயர் பரிசுத்த பாப்பரசரிடம் அண்மையில் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது.**

யாழ்ப்பாணம், திருமலை, மட்டுநகர், மன்னார் மறை மாவட்டங்களை தமக்குள் இணைத்து தனி அலகாகச் செயற்படும் ஏற்பாடு ஒன்றை 1979ஆம் ஆண்டு அப்போதைய யாழ்ப்பாண ஆயர் அதிவணக் கத்துக்குரிய தியோகுபிள்ளை முன்வைத்திருந்தார். எனினும் அந்தக் கோரிக்கை சிங்கள மொழி ஆயர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் செயலற்றிருந்தது.இந்த நிலையில் 20 வருட (12ஆம் பக்கம் பார்க்க)

## சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வெட்டுக்காயங்களுடன் ஒரு சடலம் மீட்கப்பட்டுள்ளது.

விஜயபுரம், களப்புப்பகுதியில் இருந்து இச் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கிராயமடுவைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை என்பவரின் சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது.

## தமிழ் மக்களின் அபிலாசைகளை வலியுறுத்தி அவுஸ்திரேலியாவில் இன்று பேரெழுச்சி நிகழ்வு

தமிழ் மக்களின் அபிலாசைகளை அவுஸ்திரேலிய அரசுக்கு எடுத்துரைக்கும் பேரெழுச்சி நிகழ்வு இன்று அவுஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக தென் துருவ தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

தாயகம், தேசியம், சுய நிர்ணயம் என்பனவற்றிற்கான எமது மக்களின் நீண்ட போராட்டம் இன்று முக்கிய திருப்புமுனையில் உள்ளதை நீங்கள் அறிவீர்கள். கடந்த மூன்றரை ஆண்டுகள் இடம் பெற்ற சம்பவங்கள் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஒரு அரசியல் தீர்வை காணும் ஆர்வம் சிங்கள ஆட்சியாளர்களுக்கு இல்லை என்பதை தெளிவாக்கியுள்ளது.

சிங்கள ஆட்சியாளர்கள் மேல் எல்லா நம்பிக்கையையும் இழந்த நிலையில் மக்கள் தமது சுதந்திர வாழ்வுக்கு் சர்வதேச சமூகத்தின் ஆதரவை வேண்டி நிற்கின்றனர்.

சுயநிர்ணயத்தின் மூலம் சுதந்திரமாக சமாதானமாக வாழும் அடிப்படை வாழ்வுரிமைக்காக யூலை 27,2005 சர்வதேச சமூகத்திடம் அவர்கள் அறைகூவல் விடுத்துள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு முஸ்லிம் ஐ. வி. முன்னணி கண்டனம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குச் செல்ல முடியாது என ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடையினை வன்மையாகக் கண்டித்துள்ள முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, இத் தடை வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் சுதந்திர சமாதானத்திற்கான ஆணையினை மீறும் ஒரு செயல் என முஸ்லிம் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த ஒரு தலைப்பட்சமான செயற்பாடு, 2002ஆம் ஆண்டு போர்நிறுத்த சமாதான முன்னெடுப்புக்களுக்கு பாரிய பின்னடைவுகளை எதிர்காலத்தில் தோற்றுவிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் சனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தடைவிதிப்பு ஜே.வி.பி., ஹெல (12ஆம் பக்கம் பார்க்க)




லெப். கேணல் இம்ரான், பாண்டியன் படையணியின் 13ஆவது ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு வர்ணப் பிரசுரம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## ஐஸ்கிறீம் வியாபாரி கல்முனையில் சுட்டுக் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் கல்முனையில் நேற்றுக்காலை ஐஸ்கிறீம் வியாபாரியொருவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

கல்முனை பௌத்த விகாரைக்கு அண்மையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் அ. பிரேமரத்ன என அவரது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார். கல்முனை சிறிலங்கா பொலிசார் இந்த சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## வாழைச்சேனையில் துப்பாக்கிச் சூடு; இரு இளைஞர் பலி; ஒருவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பிள்ளையார் ஆலயத்தில் வைத்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு இரண்டு இளைஞர்கள் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்.

இச் சம்பவத்தில் படுகாயமடைந்த மற்றொருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் அதேஇடத்தைச் சேர்ந்த மாதவன் உமாதரன் (வயது-23)எனவும், அடுத்தவர் நாவற்குடாவைச் சேர்ந்த தில்லைநாதன் மதிவதனன் (12ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படை உலங்குவானூர்தி விபத்தில் சிக்கியது

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று அம்பாறை உகணபிரதேசத்தில் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளாகியுள்ளது.

எம்.ஐ.ரக உலங்குவானூர்தி நேற்று முன்தினம் மாலை பயிற்சிக்காக வானில் பறந்து கொண்டிருந்தபோது அதில் ஏற்பட்டகோளாறு காரணமாக தரையிறக்கப்பட்டபோது உடைந்து விழுந்துள்ளது.

அம்பாறை விமானப்படை முகாமிலிருந்து மாலை நான்கு மணியளவில் இவ்வானூர்தி புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இயந்திரக்கோளாறு காரணமாக தரையிறக்கப்பட்டது. இது பாரதூரமான விடயம் அல்ல (12ஆம் பக்கம் பார்க்க)

## கரிப்பட்டமுறிப்பு கிராம மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி நேற்று ஆரம்பம்

(மாங்குளம்)

மாங்குளம் பிரதேச கரிப்பட்டமுறிப்பு கிராம மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி நேற்றுமாலை 4.30 மணிக்கு கரிப்பட்டமுறிப்பு அ.த.க பாடசாலை மைதானத்தில்ஆரம்பமானது. இந் நிகழ்வில் பொதுச்சுடரினை இரு மாவீரர்களின் தாயாரான திருமதி பிறேமா ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக்கொடியினை முல்லை மாவட்டஅரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். கரும்புலி கப்டன் மில்லர் அவர்களின்திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரினை மாங்குளம் கோட்ட தேசியஎழுச்சிப் பேரவை செயலாளர் க.பஞ்சலிங்கம் ஏற்றிவைத்தார்.

மலர்மாலையினை கரிப்பட்டமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் சுகந்தினி அணிவித்தார்.

நிகழ்வில் கருத்துரையினை கோட்டதேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பஞ்சலிங்கம் , செ.முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினார். இந் நிகழ்வில் 100 இற்கும்மேற்பட்ட மக்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

# “வரலாற்றுப்பாதையில்... மல்லாவி மத். கல்லூரி”

## சிறப்புற நடைபெற்ற நூல் வெளியீட்டு விழா

“வரலாற்றுப்பாதையில்... மல்லாவி மத்திய கல்லூரி”என்னும் வரலாற்று நூல் கடந்த வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியின் மயில்வாகனம் மண்டபத்தில் கல்லூரி முதல்வர் திருமதி. பு. பால சுப்பிரமணியம் தலைமையில் இடம் பெற்றது.

மங்கலவிளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். தமிழ்மொழி வாழ்த்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. நூல் வெளியீட்டு உரையை கல்லூரியின் பழைய மாணவரும் கல்விளான் அ.த.க. பாடசாலை அதிபருமாகிய பொன் ரஞ்சன் நிகழ்த்தினார்.நூலின் முதல் பிரதியினை விழாவின் பிரதம விருந்தினரும், வலயக்கல்விப் பணிப்பாளருமாகிய ஏ.ஜே.குரூஸ் வெளியிட்டு வைக்க, கல்லூரி ஸ்தாபகரின் துணைவியாரும் முன்னைநாள் கல்லூரியின் ஆசிரியரும் ஓய்வு பெற்ற அதிபருமாகிய திருமதி புவனேஸ்வரி நடராசா பெற்றுக்கொண்டர். இந்நிகழ்வில் நூலாசிரியர் செல்வி றூஜினா பாக்கியநாதனுக்கு திருமதி வாணி தியாகராஜா பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். நன்றியுரையினை பழையமாணவர் சங்கச் செயலாளர் ந.உதயகுமார் வழங்கினார். இந் நிகழ்வு கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.



– இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் –

## வருடாந்த பரிசளிப்பு விழாவும் “ஆசிகள்” மலர் வெளியீடும்

(வவுனியா செய்தியாளர்)

இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் “ஆசிகள்” மலர் வெளியீட்டு நிகழ்வும் கடந்த புதன்கிழமை கல்லூரி அக்குவைனஸ் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்சகோதரி ஜெயநாயகி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வரவேற்புரையினை பிரதி அதிபர் திருமதி ஞா. சிறிஸ்கந்தராஜா நிகழ்த்த சிரேஸ்ட மாணவி உரையை செல்வி சறோசனா யேசுதாஸ் நிகழ்த்தினார். பிரதம விருந்தினராக இலங்கை ஐக்கிய நாட்டு நட்புறவுச் சங்கத் தலைவர் அருட் கலாநிதி பப்ரிஸ்குரூஸ் கலந்து கொண்டார். (10)

## பொதுக் கூட்டம்

(கிளிநொச்சி)

2005ஆம் ஆண்டு பல்கலைக் கழக அனுமதி பெற்ற மாணவர் களுக்கான பொதுக்கூட்டம் இன்று காலை 9.00 மணியளவில் கிளி நொச்சியில் அமைந்துள்ள பல் கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தில் நடைபெற இருப்ப தால் அனைத்து புகுமுக மாணவர் களையும் சிரேஷ்ட மாணவர்களை யும் தவறாது கலந்து கொள்ளுமாறு புகுமுக மாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

## உழவு இயந்திர உரிமையாளர்கள் சங்க நிர்வாகக்குழு தெரிவு

துணுக்காய் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் நேற்று காலை 10.00 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலர் நா. நந்தகுமார் தலைமையில் உழவுஇயந்திர உரிமையாளர்சங்கக் கூட்டம் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் துணுக்காய் காவல் பணிமனை உறுப்பினர் மார்த்தாண்டன், கோட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் அ. அமிர்தலிங்கம், துணுக்காய் பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் கணேசலிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்கினர். சிறப்புரையினை துணுக்காய் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் செ. புனிதன் வழங்கினார். தொடர்ந்து புதிய நிர்வாகக் குழுதெரிவு செய்யப்பட்டது. தலைவர் சி.இரத்தினசிங்கம் (காசி), துணைத்தலைவர் ந.செல்வகுமார், செயலாளர் வி. யோகலிங்கம், துணைச்செயலாளர் ச.மனோகரராஜா, பொருளாளர் ச.ரவீந்திரன் மற்றும் 19 பேர் கொண்ட உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றது. கணக்காளராக அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டார். அப்பிரதேசத்திற்கு உட்பட்ட அனைத்து உழவு இயந்திர உரிமையாளரும் சங்க நடைமுறைக்கு உட்பட்டு அங்கத்தவர் பதிவினை மேற்கொள்ள வேண்டும். எனவும் முடிவுகள் எடுக்கப்பட்டது. (24)

## புதிய கட்டட திறப்பு விழா

(மன்னார்)

மன்னார் சாந்திபுரம் அரசினர் தமிழ் கலவன்பாடசாலைக்கான புதிய கட்டடத்திறப்பு விழா எதிர் வரும் 05.10.2005 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை அதிபர் யோதாஸ் மிரண்டா தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்த விழாவில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம்,சிறப்பு விருந்தினராக திரு. அபேல் றொபேட் (மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர்), நிக்கொட் நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் க.இராஜரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (18)



கண்டவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள தட்டுவன்கொட்டி கிராமத்தில் தண்ணீருக்குப் பலத்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அங்கு மீளக்குடியேறியுள்ள மக்கள் பல கிலோமீற்றர்தூரம் சென்றுதண்ணீர் சுமந்துவருவதை படத்தில் காணலாம். (46)


இந்த மாதமாவது...

வாசிப்பு மாதம்

ஒக்ரோபர்

கிளைகள் பரப்பி
சிந்தனை வேர் ஊன்றட்டும்

வாசிப்பதாலும் யோசிப்பதாலும்
உலகை நேசிப்பீர்கள்

வாசிப்பே வாழ்வின் -
விழுதுகளாகும்

விழுது Viluthu
அகவிழி
நமது செய்தி


## உளமகிழ் அரங்காற்றுகைச் செயற்பாடு

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையும், கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியும் இணைந்து நடாத்திய தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான உளமகிழ் அரங்காற்றுகைச்செயற்பாடு நேற்று காலை 9.00 மணிக்கு தொடக்க நிலைப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மேலைத்தேய வாத்தியத்தினை இயக்குவது தொடர்பாக இசையமைப்பாளர் சு.ராஜா பயிற்சி அளித்தார். அடுத்த நிகழ்வாக சிறுவருக்கான அரங்கச் செயற்பாடு பற்றிய செயன்முறைப் பயிற்சியினை க. ஆதவன் (முதுநிலை விரிவுரையாளர்) வழங்கினார். தோல்வாத்தியக் கருவிகளில் ஒன்றான தபேலா வாத்தியத்தினை இசைப் பகுதி அரங்கேற்ற சிறுவர்கள் பாடல்களை பாட , தபேலா வித்துவான் இரா. சிவராமுடன் இணைந்து ஆசிரிய ஆலோசகர்களான பொ.விஜயா, திருமதி கௌரி சந்திரசேகரம் நகனகரத்தினம் ஆகியோரும் கூட்டாகச் செயற்பட்டனர். பல நாட்டுப் புறவியல் பாடல்களை சி. கணேசலிங்கம் மெட்டமைத்துப் பாடிக்காட்டினா கிளிநொச்சி வலயத்தின் பளை, பூநகர் கரைச்சி, கண்டாவளைக் கோட்ட ஐம்பது ஆசிரியர்கள் பெரும் உற்சாகத்துடன் ஈடுபட்டனர். நுண்கலைக் கல்லூரி வலயக் கல்விப்பணிமனையுடன் இணைந்து நடாத்தி முதல் நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது

## தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்ற இந். படகோட்டிகள் விடுதலை

இந்தியாவிலிருந்து தலைமன்னார் ஊடா கடந்த மார்ச்மாதம் சட்ட விரோதமாக அக களை ஏற்றிவந்த குற்றத்திற்காக விள மறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்று இந்த படகோட்டிகளும் சட்டமா அதிபரின் உத் வின்பேரில் கடந்த புதன்கிழமை விடுவி கப்பட்டனர்.

அரச குடிவரவு குடியகல்வு சட்டத்தி பிரகாரம் அரச செலவில் அவர்கள் இந் விற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.


# அறிவித்தல்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை நிரந்தர வதிவிடமாக கொண்ட பட்டதாரி பயிலுநர் திட்டத்தில் சேர்க்கப்படாத பின்வரும் தகைமைகளையுடையவர்கள் தங்களது சுயவிபரங்களுடனும் பட்டதாரிச் சான்றிதழ்களுடனும் நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

01. புவியியல் சிறப்புப்பட்டதாரி அல்லது புவியியலை ஒரு பாடமாகக் கொண்ட பொதுப் பட்டதாரிகள்.

02. சமூகவியல் சிறப்புப் பட்டதாரி அல்லது சமூகவியலை ஒரு பாடமாக கொண்ட பொதுப்பட்டதாரிகள்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.12943)

# கற்றினா சூறாவளியால் குறைந்தளவில் பாதிக்கப்பட்ட பகுதிக்கு மக்களை திரும்புமாறு நியூ ஓர்லியன்ஸ் மேயர் அறிவிப்பு

(வோஷிங்டன்)

**கற்றினா சூறாவளியினால் குறைந்தளவில் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேறிய மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பலாம் என நியூ ஓர்லியன்ஸ் நகர மேயர் அறிவித்துள்ளார்.**


நியூ ஓர்லியன்ஸ் வெள்ள நீர் முழுமையாக வற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்களையே சொந்த இடங்களுக்கு திரும்புமாறு அவர் கேட்டுள்ளார்.

குறிப்பிட்ட பகுதியில் சுகாதாரத்திற்கு ஓரளவு அச்சுறுத்தல்கள் இருக்கின்ற போதிலும் அவர்களைத் திரும்புமாறு பணிக்கப்பட்டுள்ளது. கொள்ளைச் சம்பவம் தொடர்பாக நகரப் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். இக்கொள்ளைச் சம்பவங்களை பொலிசாரின் உதவியோடு மீட்க முடியும் என்று நியூ ஓர்லியன்ஸ் நகரமேயர் கூறியுள்ளார்.ஒரு மாதத்திற்கு முன்னர் ஏற்பட்ட கற்றினா சூறாவளியையடுத்து நியூஓர்லியன்ஸ நகரில் இடம் பெற்ற கொள்ளைச்சம்பவங்கள் தொடர்பாக பல அதிகாரிகளைநகரப்பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். இக்கொள்ளைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறிய நான்கு பொலிஸ் அதிகாரிகள் கடமையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதாக நியூ ஓர்லியன்ஸ் நகர பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். கொள்ளைச்சம்பவங்கள் இடம் பெற்றபோது ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாக்கள் சிலவற்றில், பொலிஸ் அதிகாரிகள் களவுப்பொருட்களுடன் காணப்பட்டதாக பதில் பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார். இவர்கள் கொள்ளையிட்டார்களா அல்லது கொள்ளையிடப்பட்ட பொருட்களை மீட்டார்களா என்பது குறித்து இதுவரை அறியக்கிடைக்கவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.





கனடாவில் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி பிரதமர் போல் மார்ட்டின் வான்கோவா நகரில் உள்ள குழந்தைகள் இல்லத்திற்கு சென்றார். அங்கு துவிச்சக்கரவண்டி ஓட்டும் ஒரு சிறுமியுடன் பிரதமர் விளையாடும் காட்சி.



இந்தோனேஷியாவில் எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து ஜகார்த்தாவில் போராட்டம் நடாத்தும் இந்தோனேஷிய மக்கள்.

# இங்கிலாந்திடம் பின்லேடன் அடைக்கலம்?

(லண்டன்)

இங்கிலாந்தை எதிர்க்கும் அல்ஹைதா அமைப்பின் தலைவர் பின்லேடன் அந்த நாட்டிலேயே அடைக்கலம் கேட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அல்ஹைதா இயக்கத் தலைவர் பின்லேடனை பிடிக்க அமெரிக்கப் படை கடந்த பல ஆண்டுகளாக தேடி வருகிறது. 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அவரது அல்ஹைதா இயக்கத்தினர் விமானங்களை கடத்தி நியூயோர்க்கின் உலக வர்த்தக மைய கட்டடத்தை தகர்த்த பின்தான் அவர் எவ்வளவு அபாயகரமான தீவிரவாதி என்பது உலக நாடுகளுக்குத் தெரிய வந்தது.

அமெரிக்கா மீது மீண்டும் தாக்குதலுக்கு பின்லேடனின் ஆதரவாளர்கள் தருணத்தை எதிர்பார்த்து இருக்கிறார்கள். அமெரிக்க ஆதரவு நாடான இங்கிலாந்து மீதும் பின்லேடனுக்கு வெறுப்புள்ளது.

இங்கிலாந்தை எதிர்க்கும் பின்லேடன் இங்கிலாந்து நாட்டிலேயே அடைக்கலம் கேட்டிருப்பதாக தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

சவூதி அரேபியாவில் பிறந்த பின்லேடனின் உறவினர்கள் ஏராளமானவர்கள் லண்டனில் இருக்கிறார்கள். சூடானில் உள்ள தனது முகாமை கலைத்து விட்டு லண்டனில் தஞ்சம் புக பின்லேடன் விரும்பினார். லண்டனில் அடைக்கலம் கேட்டு கடந்த 1995 ஆம் ஆண்டு அப்போதைய இங்கிலாந்து உள்துறை அமைச்சர் மைக்கேல் ஹோலாரிடம் தூதர்களை அனுப்பினார். ஆனால் அவருக்கு அடைக்கலம் கொடுக்க இங்கிலாந்து மறுத்து விட்டது. இதனால் இங்கிலாந்து மீது அவருக்கு ஆத்திரம் மேலும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



# அமெரிக்காவால் தடுத்து வைக்கப்பட்ட ரைம்ஸ் பத்திரிகையாளர் விடுதலை

(வோஷிங்டன்)



அமெரிக்க மத்திய உணவுத்துறையின் பிரதிநிதி ஒருவர் சம்பந்தமான தகவல்களை வெள்ளை [illegible]ரிகை கசியச்செய்ததா என்பது குறித்து நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையாளர் ஒருவர் யூரிகள் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க மத்திய உணவுத் துறையின் உளவாளியான வலரி விளேம் என்பவரின் அடையாளத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பத்திரிகைகளில் கசிய விட்டவர் யார் என்று கூற மறுத்திருந்த அமெரிக்க பத்திரிகையாளர் யூலின்மிளர் நேற்று முன்தினம் அவ் விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணையில் சமுகமளித்தார். தமக்கு தகவல் வழங்கியவர் யார் என்று கூறமறுத்தமைக்காக 85 நாட்கள் சிறைவாசம் இருந்த யூலின் மிளர் விசாரணைக்கு ஒத்துழைப்பதாக வாக்குறுதியளித்ததைத்தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.



நேற்று முன்தினம் பலஸ்தீன மேற்குக் கரை கிராமம் ஒன்றில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலின் போது மாற்று வலுவுடைய ஒருவர் வாக்களிக்க உதவி செய்யப்படுகின்றது.

# கலிபோர்னியாவில் காட்டுத் தீ 24 ஆயிரம் ஏக்கர் எரிந்து சாம்பர்

அமெரிக்க கலிபோர்னியா மாநிலத்தில் பரவிய தீயின் காரணமாக 25 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பு எரிந்து சாம்பராகியுள்ளதாக மதிப்பீடுகள் தெரி விக்கின்றன.

சாதகமான கால நிலையினால் தீயை இலகுவில் கட்டுப் படுத்த முடிந்ததாக மீட்புப் பணி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை பரவிய தீயினால் நூற்றுக்கும் அதிகமான வீடுகள் முற்றாக எரிந்துள்ளதோடு ஆயிரக் கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். இத் தீயினை அணைப்பதற்கு மூவாயிரத்திற்கும் அதிகமான தீயணைப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இத் தீ ஏனைய இடங்களுக்கும் பரவக் கூடும் என்ற அச்சம் காரணமாக 20 இற்கும் அதிகமான பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலும், அதனையண்டிய நகர்ப்புறப் பகுதி களிலும், தீயின் காரணமாக 17 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான நிலப்பரப்பு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

# இந்தியக் குடியரசு துணைத் தலைவர் ஒரு வார கால வெளிநாட்டுப் பயணம்

இந்தியக் குடியரசுத்துணைத் தலைவர் செகாவத் ருமேனியா, பெலாறஸ், ஆர்மேனியா போன்ற நாடுகளிற்கு ஒரு வார கால நல்லெண்ண விஜயமாக நேற்று புறப்பட்டுள்ளார்.

ருமேனியாவின் நான்கு நாள் பயணத்தின் போது அந் நாட்டு அதிபர் பிரதமர் உட்பட பல முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார். இரு நாடுகளுக்கிடையே அறிவியல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, எண்ணெய் சுத்திகரிப்பு அனல் மின் உற்பத்தி போன்ற பல துறைகளில் நெருங்கிய ஒத்துழைப்பு நிலவுகின்றது.

ஐ.நா பாதுகாப்புச் சபையில் இந்தியாவிற்கு நிரந்தர உறுப்பினர் பதவி அளிக்கப்பட வேண்டும் என்று ருமேனியா ஆதரவு தெரிவித்து வருகின்றது.

குடியரசுத் துணைத் தலைவரின் ருமேனியப் பயணத்தினால் இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார தொழில் உறவுகள் மேலும் வலுவடையு ம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



நியூஓர்லியன்சில் கற்றினா சூறாவளியால் நீர் வழங்கும் குழாய் பழுதுபட்டிருப்பதை அவதானித்துத் திருத்த வந்திருக்கும் ஜேர்மன் பணியாளர்கள்

# 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மொரோக்கோவில் தொல் பொருள் துறையினரும் அகழ்வாராய்ச்சி நிபுணர்களும் அங்குள்ள டபோ கால்ட் பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர்.அங்குள்ள ஒரு இடத்தை தோண்டிப் பார்த்தபோது ஏராளமான மனித எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்த எலும்புக்கூடுகள் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதர்களின் எலும்புக்கூடுகள் என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. அங்கு ஒரு கிராமம் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இறந்தவர்களின் உடலோடு சில அபூர்வ இன விலங்குகளும் புதைக்கப்பட்டுள்ளன. இது ஒரு வகை ஆடுகள்என்றும் இந்த வகை ஆடுகள் இப்போது அழிந்து விட்டன என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

அந்தப் பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய ஆயுதங்களும் கிடைத்தன. இவை எலும்புகள் மற்றும் கருங்கற்களால் உருவாக்கப்பட்டவை.

# ஒரேஞ் பழத்தில் இருந்து எய்ட்ஸ் நோய்க்கு மருந்து

(சிட்னி)

உயிர் கொல்லி நோயான எய்ட்ஸ் நோய் உலகம் முழுவதும் வேகமாக பரவி வருகிறது. இந்த நிலையில் சார்ஸ், பறவைக் காய்ச்சல் போன்ற நோய்களும் சில நாடுகளை பயமுறுத்திக் கொண்டு இருக்கின்றன.

அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்ரோபிரஷ் என்ற மருந்துக் கம்பனி புதிய மருந்து ஒன்றை கண்டு பிடித்துள்ளது.

ஒரேஞ் பழத்தை பிழிந்தும் அதன் இலையை பிழிந்தும் எடுக்கப்பட்டது தான் இந்த மருந்து என்று அந்தக் கம்பனி கூறி யுள்ளது. எய்ட்ஸ் நோயைப்பரப்பும் எச்.ஐ.வி கிருமிகளை இந்த மருந்து தடுப்பதுடன் சார்ஸ் பறவைக் காய்ச்சல் பாதித்தவர்களும் இந்த மருந்தை பயன்படுத்தலாம் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ஐரோப்பிய சமூகத்தின் முடிவில் மாற்றம் வேண்டும்
# இன்றேல் தமிழீழ மண்ணில் போராட்டம் வலுவடையும்

## திருமலை தமிழ் மக்கள் பேரவை வலியுறுத்து

**ஐரோப்பிய சமூகம் தனது முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும். இன்றேல் தமிழீழ மண்ணில் எமது போராட்டம் மேலும் வலுவடையும் என திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் அதன் தலைவர் வ.விக்னேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

ஐரோப்பிய சமூகம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்டுள்ள தீர்மானம் சிறிலங்கா தேசத்தின் பேரினவாத சக்திகளின் இன ஒடுக்கல் நடவடிக்கைக்கு உந்து சக்தியை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறையின் மூலமும் இராணுவ நடவடிக்கையின் மூலமும் பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தி, எமது மக்களை கொன்று குவித்து, எமது தாயக மண்ணின் பொருளாதார வளங்களை அழித்த சிறிலங்கா அரசிற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ நடவடிக்கை மூலம் கொடுத்த பதிலடியின் காரணமாக சிறிலங்கா அரசும் சிறிலங்கா இராணுவ கட்டமைப்பும் நிலை குலைந்திருந்த வேளையில் தான் சர்வதேச சமூகத்தின் தலையீட்டின் காரணமாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் கையொப்பமிட்டனர்.

கடந்த மூன்றரை ஆண்டுகளாக தமிழ் பேசும் மக்களுக்கு எதுவுமே செய்யாத சிறிலங்கா தேசம் மீண்டும் தமிழ் மக்களுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி பேரினவாதிகள் யாவரும் ஒன்று சேர்ந்துள்ள நிலையில் எந்தத் தீர்வையும் தருவதற்கு ஒப்புக்கொள்ளாத சூழ்நிலையில் தற்போது ஐரோப்பிய சமூகம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு முன்நிற்பதானது அடித்தவனை கண்டிக்காது அடிவாங்கியவனுக்கு ஆலோசனை கூறும் நடவடிக்கை ஆகும். கடந்த மூன்றரை ஆண்டுகால யுத்த நிறுத்தகாலப்பகுதியில் தமிழ் மக்கள் பெற்றது எதுவுமே இல்லை. ஐரோப்பிய சமூகத்திற்கு தலைமை தாங்கும் பிரித்தானியா- தான் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை சிறிலங்கா தேசத்துடன் இணைத்து தமிழ் பேசும் மக்களை சிறிலங்கா அரசிற்கு தாரை வார்த்துக் கொடுத்தது இந்தப் பிரச்சினைக்கு தீர்வு தர வேண்டிய பிரித்தானிய அரசு தனது தார்மீகக் கடமையை மறந்து தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளமையானது மிகத் துரோகத்தனமானதாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைக்கு பயங்கரவாதம் என்று பட்டம் சூட்டும் ஐரோப்பிய சமூகம் சிறிலங்கா அரசு செய்த/ செய்கின்ற /செய்ய நினைக்கின்ற இன அழிப்பு நடவடிக்கைக்கு என்ன பெயர் சூட்டவுள்ளது? என்பதை அறிய விரும்புகின்றோம். மறைந்த வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் கொலையை யார் செய்தது என்று எதுவுமே வெளிவராத நிலையில் அதனைக் காரணமாக வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்குரிய மக்களை கொச்சைப் படுத்துவதாகும்.

சிறிலங்கா அரசும் அதன் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் செய்த பொய்யான பிரச்சாரங்களை ஐரோப்பிய சமூகம் அப்படியே ஒப்புக்கொள்ள நினைத்தால் அது வேதனைக்குரிய விடயமாகும். தமிழ் பேசும் மக்களுக்கு சரியான ஒரு தீர்வுத் திட்டத்தை உடனடியாக வழங்கி சுயநிர்ணய அடிப்படையில் ஒரு தீர்வினைப் பெற்றுத் தந்த பின்பு ஐரோப்பிய சமூகம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருந்தால் அதில் நியாயமான தன்மை இருந்திருக்கும். அவ்வாறின்றி எமது தேச விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக ஐரோப்பிய சமூகம் தொடர்ந்து செயற்பட்டால் எமது மக்கள் தமது சொந்த பலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து சிறிலங்கா அரசிற்கு எதிராக மேலும் வலுவான போராட்டத்தை நடாத்தி தமது இலட்சியத்தை நிச்சயம் வென்றெடுப்பார்கள். எனவே ஐரோப்பிய சமூகம் நீதியின் பெயரால் தமது ஒரு தலைப்பட்சமான முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென வற்புறுத்தி தாழ்மையுடன் வேண்டுகின்றோமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் ஆங்கிலத்தில் பிரித்தானிய தூதரகம் மூலமாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் அமெரிக்க தூதரகம், நோர்வே, பிரான்ஸ், ஜேர்மன் தூதரகங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு என்பனவற்றிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (25)

# போராட்டத்திற்கு தாமாக முன்வந்து தனது மகளை இணைத்த தந்தை!

(மல்லாவி)

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தந்தையொருவர் தனது மகளை தாமாக முன்வந்து இணைத்துள்ளார்.

ஆனைவிழுந்தான் அம்மன் கோவிலடியைச்சேர்ந்த உருத்திரானந்தன் என்பவரே கடந்த 28ஆம் திகதி தமது மகளை விடுதலைப்போராட்டத்தில் இணைத்துள்ளார்.

அப்பிரதேச பரப்புரைப்போராளி சர்வன் மூலம் விடுதலைப் போராட்டத்திற்கு அவர் தனது மகளை இணைத்துள்ளார்(24)



புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் வெள்ளம் வடிந்தோட முடியாத நிலையில் தேங்கி நிற்பதால் அவ்வெள்ளத்துக்குள் எருமை மாடுகள் நீச்சலடிப்பதை படத்தில் காணலாம். இப்பகுதியில் வெள்ள நீர் தொடர்ச்சியாக நிற்பதால் சுகாதார சீர்கேடுகளும் ஏற்பட நிறைய வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது.

படப்பிடிப்பு-க.தவரட்ணம்

# காது,மூக்கு ,தொண்டை நிபுணரின் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

அமெரிக்காவிலிருந்துவருகை தந்துள்ள வைத்திய நிபுணர் காது,மூக்கு,தொண்டை சம்பந்தமான நோய்களுக்கு சிகிச்சை மேற்கொள்ளவுள்ளார்.

மேற்படி சிகிச்சைகள் எதிர்வரும் 4ஆம்,5ஆம் திகதிகளில் கிளிநொச்சி மருத்துவர் பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

சிகிச்சைபெறவிரும்புபவர்கள் கிளிநொச்சி மருத்துவர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்புகொள்ளும்வண்ணம் மருத்துவப்பிரிவு நடுவப்பணியகப் பொறுப்பாளர் வேண்டியுள்ளார். (சோ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் மின்விநியோக விரிவாக்க நடவடிக்கைகள் துரித கதியில்!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட இலங்கை மின்சார சபையினரால் கிளிநொச்சியில் டிப்போச்சந்தியிலிருந்து டிப்போ கோணாவில் வீதியில் ஐந்து கிலோ மீற்றர் தூரம் வரைக்கும் மற்றும் பரந்தன் சந்தியிலுள்ள கடைத் தொகுதிகளுக்கும் மின்சாரம் வழங்குவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி விடயம் தொடர்பாக கிளி. மாவட்ட மின்சார சபையினருடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்;

தற்போது பரந்தன் பகுதியிலுள்ள கடைத் தொகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கெனவும் மற்றும் டிப்போசந்தியிலிருந்து டிப்போ கோணாவில் வீதியில் ஐந்து கிலோமீற்றர் வரையான பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான பிரதான மின்கம்பி இணைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் இந்நடவடிக்கைகள் நிறைவுபெற்றதும் கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி சந்திவரையும் மற்றும் வட்டக்கச்சி சந்தியிலிருந்து நான்கு வீதிகளுக்கு ஒவ்வொரு கிலோமீற்றர் வரையும் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமெனவும் தற்போது இதற்கான நடவடிக்கைகள் மின்சார சபை உழியர்களால் துரிதமாக மேற்கொள்ளப்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளனர் . (சோ)

# விவசாய உள்ளீடுகள் வழங்கல்

(மல்லாவி)

முல்லை. மாவட்ட பாண்டியன்குளம் மாந்தை கிழக்கு பிரதேச பகுதியில் போரூட் நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையில் பாலிநகர் பகுதியில் அமைந்த சமூக மேம்பாட்டு நிறுவனத்தினரால் விவசாய உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் சமூக மேம்பாட்டு நிறுவனத் தலைவர் வெ.பிரிந்தாபன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் போரூட் பிரதிநிதி காண்டீபன் கருத்துரைத்து, ஆலோசனைகளையும் வழங்கின இந்நிகழ்வில் சிறந்த விவசாயிகளுக்கு விதை தானியங்களும் நடமாடும் வியாபாரிகளுக்கு பணமும் வழங்கினார். இந்நிகழ்வில் சமூக மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் சிவாமாஸ்டர், கமக்கார அமைப்பினர், பொது அமைப்புக்களின் அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(24)

# வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய விடுதி மாணவர்களுக்கான கணினி அறை திறப்பு விழா



வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய விடுதி மாணவர்களுக்கான கணினி அறை திறப்பு விழா கடந்த வியாழக் கிழமை நடைபெற்றது.

கல்லூரி அதிபர் சி. உலகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ச.கனகரட்ணம், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். கணினி அறையினை பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் நாடாவை வெட்டி சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் விடுதி மாணவர்கள், ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (10)

# சர்வதேச சூழல் தினத்தை சிறப்பிக்க கிளிநொச்சியில் விசேட ஏற்பாடுகள்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ நல்லாட்சி ஆணையத்தின் ஆலோசனையின் கீழ் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறையின் அனுசரணையுடன் கரைச்சி பிரதேச சபையினரால் சர்வதேச சூழல் தினம் சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று முன்தினம் பகல் 10.00மணிக்கு கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கரைச்சிபிரதேச சபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன், கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன், தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் விக்ரமன், மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தாயகப் பிரதேசத்தின் சூழலைச் சுத்தப்படுத்தி சுகாதாரம் பேணுவதன் மூலம் மக்களின் ஆரோக்கியமான நலவாழ்வினை மேம்படுத்துவது சம்பந்தமாக கலந்துரையாடினர்.

எதிர்வரும் ஏழாம் திகதி சர்வதேச சூழல் தினத்தை முன்னிட்டு முறிகண்டிப் பிரதேசத்திலிருந்து பரந்தன் பகுதி வரையிலான பகுதிகளில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கையாக சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதெனவும், செயற்படுத்துவதற்கான குழுக்களும், தெரிவு செய்யப்பெற்று நடவடிக்கைகள் பகிர்ந்தளிக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பனை,தென்னை வள அபி.கூ. வன்னி மாவட்ட மாதாந்த மாநாடு

(அலுவலக செய்தியாளர்)

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் கிளி, முல்லை, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய சங்கங்களுக்கான மாதாந்த மாநாடு கடந்த வியாழன் அன்று தலைவர் க.புவனேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

இதில் பனை, தென்னை சார் அங்கத்தவர்களது குடும்ப முன்னேற்றம் தொடர்பாகவும் அவர்களது எதிர்கால பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாகவும், சங்கங்களின் அபிவிருத்திச் செயற்பாட்டில் ஒன்றுணைந்த முன்னேற்றம் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

மேலும் கடந்த வருட இறுதியில் அழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட இச் சங்கங்கள் சார்ந்த அங்கத்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவு தொகைப் பணமாக ரூபா 104000, பாதிக்கப்பட்ட பனை, தென்னை வள சங்கங்களான முல்லை. கிழக்கு, முல்லை- தெற்கு, முல்லை. வடக்கு ஆகியவற்றுக்கு ரூபா 20,000 வீதம் ரூபா 60,000 முமாக மொத்தம் ரூபா 164000 ரூபாவுக்கான காசோலை வழங்கப்பட்டன.இதன் முதற் காசோலையை வன்னி மாவட்ட ப.தெ.வள அ.உ ஆணையாளர் எ. சின்னத்தம்பியும் ஏனையவற்றினை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், பேரிணையத் தலைவர், பொதுமுகாமையாளர் ஆகியோரும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மன்னார் கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் வீட்டில் தீ!

மன்னாரில் உள்ள யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு உறுப்பினர்களின் வீட்டில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.இது பற்றி அறிந்ததும் மன்னார் சிறிலங்காப் பொலிசாரும், இராணுவத்தினரும் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்று வீட்டு யன்னல்களை உடைத்து மூன்று உறுப்பினர்களையும் காப்பாற்றியதாக மன்னார் பொலிசார் தெரிவித்தனர்.வீட்டில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டியின் வயர்களில் தீப்பற்றியதால் முழுவீடும் புகைமண்டிக் காணப்பட்டுள்ளது. இதனால் கண்காணிப்புக்குழுவினர் மூச்செடுக்க சிரமப் பட்டு உதவிகோரி கத்தியுள்ளனர்.இவர்களின் வீட்டிற்கு அருகில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசாரும் இராணுவத்தினரும் உடன் விரைந்து இம் மூவரையும் காப்பாற்றியுள்ளதுடன் தீயையும் அணைத்துள்ளனர்.

# நியாயமான தீர்வு ஏற்படும் என்பதில் நம்பிக்கை இழந்திருக்கிறோம்!

## - யாழ்.பொங்குதமிழ் நிகழ்வில் இரா.சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)

நாங்கள் விரக்தியின் விளிம்பில் நிற்கிறோம் எமது தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு ஏற்படும் என்பதில் நம்பிக்கை இழந்து இருக்கின்றோம் அதனால்த்தான் இது போன்ற பிரகடனங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என தமிழ் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தான் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அண்மையிலே ஜே.வி.பியின் ரில்வின் சில்வாவுடன் ஒற்றை ஆட்சிமுறை நீடிக்க வேண்டும் என்று கூறப்படும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்ட போது தற்போது அமைச்சராக இருக்கின்ற தமிழர் ஒருவர் சமுகமளித்திருந்தார். அப்போது அவர் கைதட்டிச் சிரித்துக் கொண்டிருந்தார். தமிழ் மக்களால் புரிந்து கொள்ள வேண்டும். நமது பிரகடனங்களுக்கு மதிப்பளிக்க இத்தகைய செயல்களை நமது மக்கள் சனநாயக ரீதியாக அகற்றவேண்டும்.

பாராளுமன்றத்தேர்தல் வருமா என்பது தெரியாது ஆனால் பாராளுமன்றத்தேர்தல் வருமாயின் நிச்சயமாக அமைச்சராக இருக்கும் அந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்கு தமிழ் மக்கள் பதில் தரவேண்டிய கடமை இருக்கிறது. இப்படியான நிலையில் சுதந்திரக்கட்சி ஐக்கியதேசியக் கட்சி மற்றும் சமாதானம் தொடர்பாக பேசும் கட்சிகள் இந்த மாநாட்டு செய்தியை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் ஒரு நியாயமான ஒரு நிரந்தர சமாதானத்தீர்வை எதிர்பார்க்கின்றார்கள். அல்லது தங்களது முழுமையான சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டுமென்றுகோரியிருக்கிறார்கள் என்பதை அந்தக் கட்சிகள் புரிந்து கொள்ளவேண்டும். சர்வதேச சமூகம் எமது நிலைப்பாட்டை தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். அது அவர்களது கடமையென சம்பந்தன் தமது உரையில்மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழரின் தலை விதியை நிர்ணயிப்பவர்களாக தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளனர்

-முன்னாள் ஆயர் ஜெபநேசன் அடிகளார்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் அனைவரும் ஒருதலைவனின் வழிநடத்தலின் கீழ் ஒன்றுபட்டு விட்டோம் என்பதனையே பொங்குதமிழ் நிகழ்வுகள் வெளியுலகிற்கும் சிங்களப்பேரினவாதத்திற்கும் எடுத்துக்காட்டுவதாக தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் ஜெபநேசன் அடிகளார் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதுதெரிவித்தார்

அவர் தனதுரையில் தமிழ் மக்களுடைய தலை விதியை நிர்ணயிக்கின்றவர்களாகவே தமிழீழ விடுதலைப்புலிகள்உள்ளனர் என்பதை தமிழ்மக்கள் அனைவரும் ஒன்று கூடி வெளிப்படுத்துவதற்கு தயாராகி இருப்பதே தமிழ் மக்களுக்கு கிடைத்த பாரிய வெற்றியாகும் பல ஆண்டு காலமாக எமது மக்கள் அனுபவித்து வருகின்ற கொடூரமான சம்பவங்களுக்கு விடைகொடுக்கும் காலகட்டத்தில் தான் தமிழ் தேசிய இனம் தற்போது உள்ள தென்பதை சிங்கள பேரினவாதமும் சர்வதேச சமூகமும் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமென அவர்மேலும் தெரிவித்தார்.

# தமிழ் தேசிய இனம் தனது பலத்தின் மூலம் தனது தலைவிதியை நிர்ணயிக்கத் தயாராகிவிட்டது!

## யாழ்.பொங்கு தமிழ் நிகழ்வில் பா.உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

தமிழர் தாயகத்தின் விடுதலைப் போராட்டம் விடியலை நெருங்கும் காலகட்டத்தில் தமிழ்தேசிய இனம் தமது தாயகத்தில் தமது பலத்தில் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கத் தயாராகிவிட்டது என்பதை இந்த யாழ். மண்ணிலிருந்து சிறிலங்கா அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெரிவிக்கவே நாம் கூடியுள்ளோம்.தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் இருக்கும் வரை தமிழ்தேசிய ஆன்மாவை அழிக்க முடியாது .

என்று நேற்று முன்தினம் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார்பொன்னம்பலம் கூறினார்.

இன்றைய தினம் தமிழர்வாழ்வின் திருநாள். அலை அலையாக வந்து கடலென திரண்டு நிற்கும் தமிழ் வெள்ளம் பொறுமையின் எல்லையில் நிற்கிறோம். பொங்கி எழுந்து நிற்கும் எமது உணர்வுகளை உலகமே புரிந்து கொள் எனக் கூறி நிற்கிறோம்.

நிச்சயமாக இந்த முழக்கம் காற்றோடு கலந்து உலகின் காதுகளை எட்டும் உண்மையை உலகம் புரிந்துகொள்ளும்.

தமிழ்தேசியப் போராட்டம் தானாக உருவாகவில்லை. உருவாக நிர்ப்பந்திக்கப்பட்டது. தமக்கென தனியரசை வரலாற்றில் கொண்டிருந்தவர்கள் நாம். ஆனால் 1948 ஆம்ஆண்டில் இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரம் சிங்களவருக்கு மாற்றப்பட்டது.

இத்தீவின் சுதந்திரம் சிங்கள இனத்தின் மேலாண்மையை அங்கீகரிப்பதாகவும் தமிழரின் இறைமையைப் புறந்தளுவதாகவும் நசுக்குவதாகவும் அமைந்தது.

இந்நிலையில் தமிழர்கள் எமது இறைமையை நிலைநிறுத்துவதற்காக போராட்டத்தில் இறங்கினர். ஒரு நாட்டின் இறைமை என்பது நாட்டு மக்களிடமே உள்ளது. அதைப்போன்று ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு என்பது அந்நாட்டின் அனைத்து மக்களுடன் மேற்கொள்ளும் ஒரு ஒப்பந்தமாகும்.

இதுவரையில் இலங்கைத் தீவில் உருவாக்கப்பட்ட எந்தவொரு அரசியல் அமைப்பையும் தமிழ் மக்கள் அங்கீகரிக்கவில்லை. ஒரு போதும் நாம் ஏற்றுக்கொண்டதும் இல்லை.

தமிழ்தேசிய இனம் என்ற ஆத்மாவை சிங்கள அரசுகள் அழிக்க முடியவில்லை. அதை அழிக்கவும் முடியாது. ஏனெனில் தமிழ் மக்கள் எடுக்கக் கூடிய முடிவுகளை, தீர்மானங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய வலுவுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின தலைமைத்துவத்தைக் கொண்டுடிருக்கிறோம்.

நாங்கள் ஆயுதங்களின் மீது விருப்புக் கொண்டவர்கள் அல்ல. வன்செயல்களில் காதல்கொண்ட இனம்அல்ல. ஆனால் உரிமைகளின் மீது மோகம் கொண்ட இனம் எமது தமிழ்தேசிய இனம், அந்தத் தணியாத தாகம் எம்மை ஆயுதங்களை எடுக்க வைத்தது. இனிமேலும் பொறுக்க முடியாது என்ற நிலையில் ஒரு இனம் செய்யக் கூடியது இதுதான்.உலக வரலாற்றில் இதுதான் நடந்திருக்கிறது. அதனை அவ்வப்போது உலகமும் அங்கீகரித்துள்ளது.

எமது மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்க வேண்டும் என்று சர்வதேச அழுத்தத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு மிகச் சிறிய பொதுக்கட்டமைப்பைக் கூட சிங்கள பேரினவாதம் நீதிமன்றத்தை ஆயுதமாகப் பாவித்து முடக்கியது. பசித்தவனுக்கு புசிக்கக் கொடுப்பதையே தடுக்கும் சிங்களப் பேரினவாதம் நீதி மன்றத்தை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யுமா என்பதைச் சர்வதேச சமூகம் சிந்தித்துப் பார்த்து தீர்க்கமான உறுதியான -இறுதியான முடிவை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

## – யாழ். பொங்கு தமிழ் நிகழ்வில் –









(படங்கள்:-சசி.தீபன்)





# விடுதலைப் போரியல் வரலாற்றில் சாதனைகள் படைத்துள்ள இம்ரான் பாண்டின் படையணி இன்று 13 ஆம் ஆண்டு நிறைவு நாள்



இன்று 13 ஆம்ஆண்டை நிறைவு செய்யும் இம்ரான் பாண்டியன் படையணி விடுதலைப் போரியல் வரலாற்றில் மிகப் பெரிய சாதனைகளையும் பல வெற்றிக் களங்களையும் கண்டது. விடுதலை வரலாற்றில் பல அரிய சாதனைகளைப்



படைத்த படையணி இம்ரான் பாண்டியன் படையணி ஆடிப்பாடி, பகை விரட்டிய அந்த வீரர்களை 02.10.1992 அன்று ஒரு படையணியாக பிரகடனம் செய்தார் தேசியத் தலைவர் அவர்கள் இம்ரான் பாண்டியன் படையணி வீரத்தளபதிகளின் பெயரில் உதித்த ஒரு சிறப்புப் படையணியாகும். இம்ரான், பாண்டியன் ஆகிய இருவரும் யாழ்ப்பாணம் கொக்குவில் என்னும் ஒரே ஊரில் ஒரே பாடசாலையில் தமது கல்வி களை முடித்து ஒரே நேரத்தில் போராட்டத்தில் இணைந்து ஒன்றாக ஒரே பயிற்சி முகாமில் பயிற்சி முடித்து ஒரே அணியில் கடமை யாற்றியவர்கள். தலைவருக்கு இடதும், வலதுமாக காப்பு வழங்கி இந்தியப் படைகள் ஏற்படுத்திய சவாலை தலைவரின் கட்டளைக்கமைவாக நேருக்கு நேர் முகம் கொடுத்து இந்தியப் படைக்குப் பதிலடி கொடுத்தவர்கள். போரை விரிவுபடுத்தி எதிரிகளைக் கதி கலங்க வைத்தவர்கள் இவர்கள். பல களங்களில் சாதனைகள் படைத்து யாழ். மண்ணில் முதலில் வித்தாகினார் லெப்ரினன்ட் கேணல் பாண்டியன்.

பாண்டியன் வீரச்சாவடைந்து ஓரிரு தினங்களில் பாண்டியனின் கடமையை ஏற்றுச் செய்யுமாறு இம்ரானுக்கு தலைவர் அவர்களினால் கட்டளை இடப்படுகிறது. தலைவரின் கட்டளைக்கமைவாக இம்ரான், பாண்டியனின் கடமையை ஏற்று பாண்டியன் எதிரியை எவ்வாறு திணறவைத்தாரோ அதைவிட அதிகமாக செயற்பட்டார்.

பின்னர் இம்ரானும் யாழ். மண்ணில் வித்தாகி ஒரே துயிலும் இல்லத்தில் உறங்குகின்றார்கள். இந்த வீரப்புதல்வர்கள். பள்ளிக் காலம் தொட்டு மண்ணில் வித்தாகும் வரையும் ஒரே பாணியில் செயற்பட்டவர்கள் இந்தத் தோழர்கள்.

**வீ.பிரதீபன்**

தலைவரின் நினைவை செயலில் வென்று தலைகள் கொடுத்து தடைகள் வென்று காட்டிய இந்த வீரத் தளபதிகள் பெயரே அன்று கட்டைக்காட்டில் படைத்தளம் மீது கடலின் ஊடாக ஊடுருவிச் சென்று ஆயுதக் களஞ்சியம் மீதான தாக்குதல் நடவடிக்கையின் பின் இப் படையணிக்குப் பிரகடனப்படுத்தப்பட்டது.

கட்டைக்காட்டுப் படைத்தளம் மீதான தாக்குதல் விடுதலைப் போராட்டத்தில் முதல் முதலாக கடல்வழியாக ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்திய சண்டையாகும்.

இந்த ஊடுருவல் தாக்குதலை வெற்றிகரமாகச் செய்யக்கூடிய அணி இந்த அணிதான் என்று தலைவர் அன்று முடிவெடுத்தார். அன்றைய காலகட்டத்தில் இந்தப் படையணியின் தளபதியாக இருந்த கேணல் சொர்ணம் அவர்களுக்குத் தலைவர் அவர்கள் கட்டளைகளைப் பிறப்பிக்கின்றார்.

அவரின்பொறுப்பில் இருந்த சிறப்புப் பயிற்சிப் பெற்ற வீரர்களைத் தெரிவு செய்து இந்த நடவடிக்கைக்குப் பயன்படுத்துவதற்கு ஒழுங்குபடுத்துமாறு பணித்தார்.

அதற்கமைவாக தளபதிகேணல் சொர்ணம் அவர்கள் வீரர்களை ஒழுங்குபடுத்தி நடவடிக்கைக்குத் தயாராகினார். இந்த நடவடிக்கையில் கடல் வழியாக ஒரு அணி நீந்திச் சென்று தாக்குதலை செய்ய இன்னோர் அணி தரைவழியாக நகர்ந்து தாக்குதலைச் செய்யும் இதை விட எதிரியை திசைதிருப்புவதற்கான சண்டை ஒன்றை செய்வதற்கு புல்லா வெளிப் பகுதியால் ஒரு அணி, நகர்ந்து பக்கவாட்டில் சண்டையைச் செய்து எதிரியை திசைதிருப்பும் இத் தாக்குதலில் கடற்புலிகள் அணி மகளிர் அணியும் முக்கிய பங்காற்றினார்கள். தலைவரின் சிந்தனைக்கேற்ற வகையில் இந்தச் சண்டைவெற்றி கொள்ளப்பட்டது.


கனரக ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் என பெருமளவான பொருட்கள் கைப்பற்றப்பட்டன. தலைவனின் கரங்களில், அரவணைப்பில் வளர்ந்த் இந்தப் போராளிகள், சென்ற இடமெல்லாம் வென்று வருவார்கள் என்ற திடமான நம்பிக்கை தலைவரிடம் இருந்தது. இதற்கேற்றாற்போல் தலைவரின் சிந்தனைக்குச் செயல் வடிவம் கொடுத்து வந்தது இந்தப் படையணி.



சண்டைக்களங்களிலே இப் படையணிகளைக் கண்டால் மற்றைய போராளிகள் மகிழ்ச்சியடைவார்கள். திடமான மனதுடன் போராடும் வலிமை பெறுவார்கள். “அண்ணையின்ர இடத்தில் இருந்து போராளிகள் வந்துள்ளார்கள்” என்று மகிழ்ச்சியடைவார்கள் எதிரி தனது இராணுவ நடவடிக்கைகளுக்கு கவசத்தை முக்கியமாகப் பயன்படுத்தி பெரியளவிலான இராணுவ நடவடிக்கைகளைச் செய்தான். இதை முறியடிக்க வேண்டும் என்று தலைவர் ஒருதிட்ட மிடுகின்றார். கவச எதிர்ப்பு அணியொன்றை உருவாக்கவேண்டும் என்று இந்தப்படையணிக்கான ஆளணியை இதே இம்ரான் பாண்டியன் படையணிப் போராளிகளிலிருந்தே தலைவர் உள்வாங்கினார். இப்போது இந்தக் கவச எதிர்ப்பு அணி பெரியதொரு படையணியாகத் தோற்றம் பெற்றுள்ளது. இதைவிட பதுங்கித் தாக்கும் அணிகள், நீண்ட தூரம் ஊடுருவிப் பதுங்கித் தாக்கும் அணிகள், உந்துருளி அணிகள் எனப் பல அணிகள் இந்தப் படையணிகளின் ஊடாக தோற்றம் பெற்றன.இதைவிட ராதா விமான எதிர்ப்புப்படையணியும் இந்த படையணியினூடாக தோற்றம் பெற்றது தான். இப்போதுள்ள கல்லூரிகளான படையத் தொடக்கப்பயிற்சிக்கல்லூரி, படை அறிவியல் கல்லூரி எனப் பல பல கிளைகளாகப் பிரிந்து போராட்டத்திற்கு வலுச் சேர்க்கக் கூடியதாக வளர்ந்துள்ளது. இதன் உருவாக்கமும் ஆரம்பகாலத்தில் இந்தப் படையணியின் ஊடாகத்தான் துளிர் விட்டதுஎனலாம்.இதைவிட இப் போராட்டத்தில் உயிர் ஆயுதங்களாக திகழ்கின்ற கரும்புலிகளும் இப்படையணியில் இருந்து தோற்றம் பெற்றனர்.

விடுதலைப்போராட்டத்தில் விசேட படைப்பிரிவுகள் இந்தப் படையணியின் ஊடாகத்தான் தோற்றம் பெற்றன. “தலைவன் நினைவை செயலில் செய்வோம் தலைகள் கொடுத்து தடைகள் வெல்வோம்.” இந்தக் கோசத்திற்கு அமைவாகவே இந்த இம்ரான்பாண்டியன் படையணி செயற்பட்டது.

தலைவர் எதையெதை சிந்திக்கின்றாரோ அந்த சிந்தனையைச் சரியாகச் செய்யவேண்டும் என்பதை இந்தப் படையணியிலுள்ள போராளிகளைக் கொண்டு செயல்வடிவம் கொடுத்தார். இவ்வாறு பல்வேறு சாதனைகளையும் படைத்து வரும்படையணி இன்று13ஆவது ஆண்டை நிறைவு செய்து விடுதலை இலட்சியத்தை நோக்கி வீறு நடைபோடுகின்றது.



# பா.ஜ.க. வில் அத்வானியின் இடத்தை நிரப்பப்போவது யார்?

"நுணலும் தன்வாயால் கெடும்" என்பதற்கு இப்போது பொருத்தமுடையவர் யார் என்று கேட்டால், எவரிடத்தும் இந்திய எதிர்க் கட்சித் தலைவர் எல்.கே.அத்வானிதான் என்று பதில் கிடைக்கும். அந்தவகையில் முதலுக்கே மோசம் என்பதால் அவரது பதவியையே விட்டு விலகும் நிலையில் தான் அத்வானி இருக்கின்றார். சுருங்கக் கூறின் இன்னும் இரண்டு மாதங்களின் முடிவில் அத்வானி தனது பதவியை துறக்கவுள்ளார் என்றுதான் கூறவேண்டும்.

இதனையடுத்து, இப்போதே அடுத்த எதிர்க் கட்சி தலைவர் யார்...? எனும் கலந்துரையாடலும் ஆலோசனைக் கூட்டங்களும் காரசாரமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை காணக்கூடியதாகவேயுள்ளது. அடுத்த பாரதிய ஜனதாவின் தலைவர் இவரா... அவரா... எனும் போட்டியைப் பார்க்கையில், இம்முறை அத்வானியின் பதவி விலகல் நாடகமல்ல உண்மை சம்பவமாகவே தான் இருக்கப் போகின்றது எனலாம்.


இதேவேளை அத்வானியின் எதிர்காலத்தில் பதவி விலகலானது அவராக விரும்பியதா...


அத்வானி

நிர்ப்பந்திக்கப்பட்டதா... எனும் சந்தேக முட்களையும் வீசியிருக்கின்றது. ஏனெனில் அத்வானியின் பதவி விலகல் பாரதிய ஜனதா தலைவர்களிடையே அதிருப்திக்குப் பதிலாக திருப்தியைத் தூவியிருப்பதே சந்தேகத்திற்கு காரணமாகும்.

ஏனெனில் பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர்களானாலும் சரி, தற்போதைய தலைவர்களானாலும் சரி, அத்வானியின் பதவி விலகலை மிகுந்த சந்தோஷத்தோடு ஆதரிப்பவர்களாகவேதான் இருக்கின்றனர். முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கூட அடுத்த எதிர்க்கட்சி தலைவரை தெரிவு செய்வதில்தான் இப்போது மும்முரமாக இறங்கியிருக்கின்றார் என்றால் அத்வானியின் தலைமையினை எவருமே விரும்பவில்லை என்று தான் கூற வேண்டியுள்ளது. அதாவது "அண்ணன் எப்போது கிளம்புவான் திண்ணை எப்போது காலியாகும்" என்று தான் பாரதிய ஜனதா கட்சியினர் காத்திருக்கின்றனர்.

அந்தவகையில், பாரதிய ஜனதாவின் மூத்த



நன்றி தினமலர்

தலைவர்களான பிரமோத் மகாஜன், அருண் ஜெட்லி, சுஷ்மா சிவராஜ், ஜஸ்வந்த்சின்ஹா, வெங்கையாநாயுடு, முரளி மனோகர் ஜோஷி போன்றோரே காலியாகும் தலைவர் பதவித் திண்ணைக்காக காத்திருப்பவர்கள்.

பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட அத்வானி, டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி தாம் எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகிவிடப் போவதாக அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பினை முன்பே எதிர்பார்த்தமை போன்று கட்சியினர் ஆமோதித்திருக்கின்றனர். இதனால் தான் அத்வானியின் தலைமைப் பதவி பறிக்கப்படுவது உறுதியாகி விட்டது என்று நம்பத் தோன்றுகின்றது.

பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொண்டதையடுத்தே அத்வானிக்கு பிரச்சினை உருவானது எனலாம். இது காலம் கடந்த நிலையில் அவருடைய தலைமைப் பதவிக்கு ஆபத்தாகவே தான் முடிந்திருக்கின்றது.

சும்மா கிடந்த சங்கை ஊதிகெடுத்தானாம் ஆண்டி என்பதாய் தானுண்டு தன் மத அரசியலுண்டு என்றிருந்த அத்வானியை பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் தான் இருகரம் கூப்பி தமது நாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

முன்பு பிரதமர் வாஜ்பாய் முஷாரப்புடன் ஆக்ராவில் பேச்சுவார்த்தை நடத்திய போது, அது தோல்வியடைய எல்.கே.அத்வானிதான் காரணம் என்று இதே முஷாரப்தான் அன்று கூறினார். இன்றும் அதே முஷாரப்தான் அத்வானி தமது நாட்டிற்கு வந்தால் தமது நாடு புனிதம் பெறும் என்பதுபோல் குழைந்து வரவேற்பளித்தார்.

முஷாரப்பின் இந்த அழைப்பிற்கு பிரதான காரணம் ஒன்றே ஒன்றுதான் கூறப்படுகின்றது.

புதிய பிரதமர் மன்மோகன்சிங் காஷ்மீர் விவகாரத்தில் கூடுதல் அக்கறை கொண்டிருப்பதால் ஏதாவது தீர்வு காஷ்மீருக்கு கிடைக்கக் கூடும்(?) அப்போது எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா உலகமே இரண்டு படுமாறு ஏதாவது செய்து விடும். அதனை தடைசெய்யவே முஷாரப் அர்த்தம் நிறைந்த அழைப்பினை விடுத்ததாக நம்பப்படுகின்றது.

ஆனால் பாகிஸ்தான் சென்ற அத்வானியோ எல்லாவற்றையுமே மறந்துவிட்டு, ஜின்னாசமாதியில் அவரைப் புகழ்ந்து துதிபாடியதும், அயோத்தி தகர்ப்பினை மிகவும் துக்ககரமான நாளாக இரங்கல் கொண்டாடியதும், எதிர்க் கட்சியினரை வெகுண்டெழ வைத்தேவிட்டது.

அதுமட்டுமன்றி, விஸ்வ ஹிந்து பரிஷட், ஆர்.எஸ்.எஸ். போன்ற சங்கப் பரிவாரங்கள்தான் தாமரை இலை சின்னமான பாரதிய ஜனதா கட்சியை இமயத்தில் ஏற்றி வைத்ததாக இன்றும் நம்பப்படுகின்றது. எனவே அந்த அமைப்புகளே அத்வானியின் பேச்சால் ஆட்டம் கண்டன.

ஏனெனில் பாகிஸ்தான் தனிநாடு என்பதை சங்கப்பரிவார அமைப்புகள் இன்னும் தான் ஏற்றுக் கொள்ளவில்லை. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் இணைந்ததே அகண்ட பாரதம் என்பது சங்கப்பரிவாரங்களின் கொள்கை அப்படி இருக்கையில் பாகிஸ்தானும் இந்தியாவும் இருவேறு நாடுகளே என்று அத்வானி கூறியது, சங்கப்பரிவாரங்களின் கனவை தவிடுபொடியாக்கிவிட்டன.

இதனால்தான் சங்கப்பரிவார அமைப்புகள் அத்வானியை பதவி விலகுமாறு ஓயாது கோஷமிட்டன. இறக்கும் வரை ஓயவில்லை. இன்று அத்தகையதோர் நிலையினை உருவாக்கியே விட்டன எனலாம்.

ஆனால் அத்வானி அத்தகையதோர் விபரீதமான விடயங்களை ஏன் முன்வைத்தார் என்பதற்கு இந்துத்துவா என்பதிலிருந்து விடுபடுவதற்காகத்தான் அத்வானி அவ்வாறு கூறியதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்துக் கூறுகின்றனர்.

இந்துத்துவா என்ற குதிரையில் இதுவரை காலமும் சவாரி செய்தது போதும். இனி இறங்கிக் கொண்டு, சிறுபான்மை இன மக்களையும் கவர்ந்து கொண்டு, பாரதிய ஜனதாவின் முகத்தோற்றத்தை மாற்றிவிடத்தான் அத்வானி பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை பயன்படுத்திக் கொண்டதாக கூறப்படுகின்றது.

அந்தவகையில் சங்கப்பரிவாரங்கள் சலசலத்தாலென்ன பாரதிய ஜனதா கட்சியே தன்பின்னால் நிற்கும் என்றுதான் அத்வானி


மதன்லால்குரானா சுஷ்மாசிவராஜ் ஜஸ்வந்த்சின்ஹா

நம்பியிருக்க வேண்டும். ஆனால் அவரது நெருங்கிய சீடர்களாக வர்ணிக்கப்படும் வெங்கையா நாயுடு, சுஷ்மா சிவராஜ் கூட அவருக்குப் பின்னே செல்ல எத்தனிக்கவில்லை.

ஆனால் சங்கப்பரிவாரங்கள் மட்டுமல்ல பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர்கள் கூட அத்வானியின் தலைமை இனி தேவையில்லையென்று குரல் கொடுத்தனர். இவர்களில் மதன்லால் குரானா பிரதான பங்கை வகித்தார்.

இதனால்தான் கடந்த மாதம் மதன்லால் குரானா கட்சியிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு நீக்கப்பட்ட[illegible] அதிகார பூர்வமாக அத்வானி தலை[illegible]வித்தது. இந்த விவகாரமும் பெரிதா[illegible]வதான் வெடித்தது எனலாம்.

வாஜ்பாய், குரானாவை கட்சியிலிருந்து நீக்கியதற்கு சிவப்பு கொடியே காட்டினார். ஏற்கனவே பாகிஸ்தான் விவகாரத்தால் அத்வானி-வாஜ்பாய் இடையே இருந்துவந்த இடைவெளி மதன்லால் குரானா நீக்கத்தால் மேலும் அதிகரித்தது.


மதன்லால் குரானா 40 வருடகாலமாக கட்சியின் வளர்ச்சிக்காக பாடுபட்டதாக வாஜ்பாய் நேரடியாக அத்வானியின் செயலை கண்டித்தார். அத்துடன் அத்வானி வாஜ்பாயிடம் கூட கலந்தாலோசிக்காது தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்ததாக ஏனைய தலைவர்கள் வெகுண்டெழுந்தனர். இதனால் வாஜ்பாய் - அத்வானியிடையே மோதல்போக்கு தீவிரமடைந்து வருவதாக விமர்சனம் எழுந்தது.

ஆக... பாரதிய ஜனதா கட்சியிடையே ஏற்பட்ட உட்கட்சிப்பூசலின் உச்சக்கட்ட நிலையே அத்வானி டிசம்பரில் பதவி விலகவுள்ளமை என்று தான் கூறவேண்டும்.

சுருக்கமா[illegible] கூறின், இந்துத்துவா கொள்கைப் பிரியர்கள் ஏற்படுத்திய வேள்வித் தீக்கு, அத்வானியின், தலைமைப் பதவி காணிக்கையாக்கப்பட்டிருக்கின்றது.

எனவே புதிய கட்சித் தலைவர் கூட இந்துத்துவா பிரியராக தான் இருக்க வேண்டும். அப்போதுதான் சங்கப் பரிவார அமைப்புகள் அமைதியாகும். இல்லையேல் மீண்டும் அவை ஓயாது குரல் கொடுக்கத் தொடங்கிவிடும்.

இந்தவகையில் சங்கப்பரிவாரங்கள் முரளி


வாஜ்பாய்

மனோகர் ஜோஷியை அடுத்த தலைவராக்க முனைவதாக நம்பப்படுகின்றது. ஏனெனில் முரளி மனோகர் ஜோஷியே இப்போதும் சங்கப் பரிவாரங்களின் பின்னால் இருக்கின்றார் என்றும் அவ்அமைப்பின் நம்பிக்கையினை தக்க வைத்துக் கொண்டிருப்பதனால், சங்கப் பரிவாரங்கள் அவரை தலைமைக்கு பரிந்துரைக்கும் என்றும் நம்பிக்கை இருக்கின்றது.

இதேபோல் மகளிர் இட ஒதுக்கீடு தொடக்கம் உயர்மட்ட கட்சிவரை சுஷ்மா சிவராஜிற்கு செல்வாக்கு பரவிக் கிடக்கின்றது. இத னால் சுஷ்மா சிவராஜே அடுத்த கட்சித் தலை வராக இருக்க முடியும் என்றும், எல்.கே. அத்வானி கூட சுஷ்மாவைதான் தலைவராக்க நினைப்பதாக ஆருடம் கூறப்படுகின்றது.

அடுத்து முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் தெரிவு ஜஸ்வந்த்சின்ஹா என்று கூறப்படுவதைப் பார்க்கையில் வாஜ்பாயின் தெரிவு முடிந்த முடிவாகும் போல்தான் இருக்கின்றது.

**அ.கலைவாணி**

இவர்களை விடவும் பிரமோத் மகாஜன், அருண் ஜெட்லி, வெங்கையாநாயுடு போன்றோரும் கட்சித் தலைவர் பதவிப் போட்டியில் குதிப்பவர்களாக எதிர்பார்க்கப்படுகின்றது.

எது எப்படியோ... பாகிஸ்தான் சுற்றுப்பயணம் எல்.கே. அத்வானியின் தலைவர் பதவியைத் தான் பறித்திருக்கின்றது. இதனை வைத்துப் பார்க்கும்போது அடுத்துவரும் பாரதிய ஜனதா கட்சித் தலைவர், பாகிஸ்தான் தமது நாட்டிற்கு அழைப்பு விடுமானால்... வேண்டாம் சாமி என்று கா[illegible] தூரம் ஓடப்போவது உறுதி என்பதைத் தான் [illegible]றைசாற்றி நிற்கின்றது எனலாம்.

# ஆவது பிறந்த நாள் வாழ்த்து



சற்குணராசா மரியமலர்
தம்பதிகளின் செல்வப்புதல்வன்

## டிலக்சன்

தனது முதலாவது பிறந்தநாளை குதூகலமாக 2-10-2005(இன்று) இவரது இல்லத்தில் வெகுசிறப்பாகக கொண்டாடுகின்றார். இவரை அன்னை மரியாளின் நல்லாசியுடன் வாழ்கவென வாழ்த்துவோர் அம்மம்மா, அம்மப்பா, மாமன்மார், அத்தைமார் ஆகியோர்.

262/5 கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

(6801)

தகவல்
ம.ஞானதாஸ்,
ம. உதயதாஸ்.



# மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

குவைத், துபாய், சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் பின்வரும் தொழில் வாய்ப்பு

| | |
|---|---|
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | (SECURITY GUARD) |
| விமான நிலைய பொதிசுமப்பவர் | (PORTER) |
| விமான நிலைய சுத்திகரிப்பு | (CLEANING WORK) |
| கட்டட தொழிலாளர்கள் | (LABOURER) |

# பெண்களுக்குரிய வேலைவாய்ப்பு

சிங்கப்பூர், மலேசியா, ஆசிய நாடுகளில் தமிழர்களின் வீடுகளில் பாதுகாப்பான தொழில்வாய்ப்பு.

| | |
|---|---|
| 1) வீட்டுப்பணிப்பெண்கள் | (HOUSE MAID) |
| 2) பிள்ளைகளை பராமரித்தல் | (BABY SITTING) |

சிங்கப்பூர், மலேசியா செல்பவர்களுக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. (உணவு, தங்குமிட வசதி இலவசம்)

தொடர்புகளுக்கு:

**RAIN BOW TRAVELS & TOURS**
32 1/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ராஜா கிறீம் கவுசுக்கு அருகாமையில்
Tel:- 0777-328219, 021- 2223237

(சி.12936)



காந்தரூபன் அறிவுச்சோலை
சிறுவர் இல்லம்

# பணிநிலை வேண்டுகை

**01.குழந்தை பராமரிப்பாளர்கள்:-**

(ஆண்,பெண் இருபாலரும் 30 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்)

**02. ஆசிரியர்கள்:-** தமிழ்
வர்த்தகம்
விஞ்ஞான ஆய்வு கூடம் (விஞ்ஞானத்துறை அல்லது கணிதத்துறை) (A/L மூன்று பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)

**03.அலுவலகம்:-** கணக்குப் பதிவாளர் (வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்),

எழுதுனர், தட்டெழுத்தாளர். (A/L மூன்று பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)

**04. பண்ணையில் வேலை செய்ய ஆர்வமுடைய ஆண், பெண் இருபாலரும்.**

**நேர்முகத் தேர்வு**

நாள்:-02.10.2005 (ஞாயிறு)

நேரம்:- காலை 9.00 மணிமுதல்.

இடம்:- நிர்வாகசெயலகம்,

காந்தரூபன் அறிவுச்சோலை, கைவேலி.

**குறிப்பு:-** விண்ணப்பங்கள் நேர்முகத்தேர்வு அன்றே பெறப்படும். அனைத்துத் தகைமைச் சான்றுதழ்களுடன் சமுகம் தரவும்.

நிர்வாகி,
காந்தரூபன் அறிவுச்சோலை.

(6617)



புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க அமைச்சு
வடக்கு-கிழக்கு மாகாணசபை
வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்புஅபிவிருத்தித்திட்டம்II(நிகொட்II)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.
"ஆ.அ.வ" கடன் இல.2168-SRI (SF)

# கேள்வி அறிவித்தல் 02

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01 வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டத்தின் (NECORD-II) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் , கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னகத்து தொழில் தருனராகக் குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கேள்விகோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்வி பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | KN/NECORD-II/AG/04 | இராமநாதபுரத்தில் விவசாய சேவை நிலைய உரக்களஞ்சியம், சுற்றுலா அறை மற்றும் வாகனத்தரிப்புஅறை என்பன மீளமைப்பு | M6 | 54,000/= |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு தரவுப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

II) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD உடன் M6 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

IV) இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI) கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

04 மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமையவேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.

05 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிகத் தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்), மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள மாவட்ட பிரதித்திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல: 021 228 5734, தொலைநகல்:- 021 228 5735, மின்னஞ்சல்:- knnecord @ sltnet.lk

06 கேள்வி ஆவணங்களை 04.10.2005 திகதியிலிருந்து 11.10.2005 திகதிவரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000/=த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்திக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

07 கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் II குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

08 அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, நிகொட் கருத்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 18.10.2005 திகதி பி.ப 1.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09 ஒப்பந்தக்காரர்களுக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று 11.10.2005 திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

10 கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்க மாட்டார்.

தி.இராசநாயகம்,
தலைவர், மாவட்ட கேள்விச் சபை,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.12940)

# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை (தம்பிஐயா) சரவணபவன் (ராசா) மண்டைதீவு

6ஆம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், இல. 59, பொற்பதி வீதி, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட பொ.சரவணபவன் 01.10.2005 அன்று காலமானார். இவர் கிருபவாணியின் (எழுதுனர், யா/பெரியபுலம் ம.வி.) அன்புக் கணவரும், கிருபவன் (கிருபன் - 2005 வர்த்தகப்பிரிவு), சாம்பவன் (தரம்8-கொக்குவில் இந்து மாணவர்கள்), பிரணவன், சாயுக்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னுத்துரை, இராசம்மா ஆகியோரின் மகனும், தபானந்தம், சங்கநிதியின் மருமகனும், குலமணிதேவி (கிளி), சுந்தரேஸ்வரி (ராணி), மனோரமா (மனோ-பிரான்ஸ்), சந்திரிகா (சாந்தி-பிரான்ஸ்), ஸ்ரீராமலிங்கதுரை (செல்வந்தன்-சுவிஸ்), தமிழரசி (உமா-இத்தாலி), இரவீந்திரன் (ரவி-பிரான்ஸ்), தேவமனோகரி (தேவா-இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஒளிவண்ணன், கேமமாலினி (மாலினி-கனடா), கோகுலவண்ணன், விஜயபாலன் (விஜி-ICRC கிளிநொச்சி) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார். இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்பு அறிவிக்கப்படும்.

தகவல்
ச.கிருபவாணி,
(மனைவி)
குடும்பத்தினர்.

கொக்குவில்
2005-10-01

(சி/12942)

# தமிழீழ மாவட்ட நீதிமன்று-ஜெயபுரம்

வழ/இல:- 248/2004
வகை:-நகை (நானாவிதம்)
தொகை:- 132250/=

திருமதி:-புவனேந்திரராசா
ஜோதிமலர்,
முழங்காவில்,
பூநகரி.
(வழக்காளி)

திருமதி:-கலைச்செல்வன் உதயகலா,
காவல்பணிமனை அருகில்,
முழங்காவில்.
(எதிராளி)

**இடைக்காலத்தீர்வை**

இந்த 2005ஆம் ஆண்டு 07ஆம் மாதம் 21ஆம் நாள் இம்மன்றில் மாவட்ட நீதியாளர் தி.க.கதிர் அவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்ட ஒருமுகத்தீர்ப்பின் படி எதிராளியானவர் வழக்காளியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் வழக்கறிக்கை அழைப்பாணை என்பனவற்றை ஏற்று பல தவணைகள் மறுமொழி அணைக்காமையினாலும், மன்றில் தோன்றாமையாலும், வழக்காளியால் எதிராளிக்கு 75000/= பணமும் அதற்கான சட்ட வட்டியையும் செலுத்தவேண்டுமென்றும், எதிராளி வ:01 என்ற ஆவணத்தில் குறிப்பிட்ட நகைகளான 7 1/2பவுண் தாலிக்கொடியையும், 1 1/2பவுண் ஒரு சோடிக்காப்பினையும், 2பவுண ஒருசங்கிலியையும் வழக்காளக்கு ஏற்பட்ட வழக்குச் செலவையும் எதிராளி வழக்காளிக்குச் செலுத்தவேண்டுமெனவும் இடைக்காலத் தீர்வைபதியப்படுகின்றது.

வரைபு -
இரா.சரவணபவானந்தன்,
சட்டத்தரணி,
பூநகரி/கிளிநொச்சி.

(த.கதிர்),
நீதியாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
மன்னார், ஜெயபுரம்.

(சி.12889)

# தமிழீழ மாவட்ட நீதிமன்று-ஜெயபுரம்

வழ/இல:- 248/2004
வகை:-நகை (நானாவிதம்)
தொகை:- 132250/=

திருமதி:-புவனேந்திரராசா
ஜோதிமலர்,
முழங்காவில்,
பூநகரி.
(வழக்காளி)

திருமதி:-கலைச்செல்வன் உதயகலா,
காவல்பணிமனை அருகில்,
முழங்காவில்.
(எதிராளி)

**மேற்படி எதிராளிக்கும், அக்கறையுடையோருக்கும்**

இவ்வழக்கில் எதிராளியானவர் மன்றில் தோன்றிய பின் மறுமொழி அணைப்பதற்கு பல தவணைகள் பெற்று மறு மொழியணைக்காமையாலும், மன்றுக்குத் தோன்றாமையினாலும் மன்று ஒரு முகவிளக்கதிற்கு விட்டு ஒரு முகத்தீர்ப்பும் வழங்கியது. இதன்பின்னர் எதிராளி 20.06.2005 அன்று மன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்லுமாறு மன்றின் சட்டப்படியான காவலில் வைக்கப்பட்ட போது எதிராளியானவர் தடுப்புக் காவலிலிருந்து தப்பியோடியமையினால், ஏற்கனவே மன்றினால் வழங்கப்பட்ட ஒருமுகத்தீர்ப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு மன்று அனுமதி அளித்ததன் பிரகாரம் இடைக்காலத்தீர்வைப் பதிந்து பகிரங்கப்படுத்தப் படுகிறது. எனவே இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 21 நாளிற்குள் எதிராளியோ அல்லது அக்கறையுடையோரோ அல்லது பிணக்கில் தொடர்புடைய நகையில் அக்கறையுடையோரோ மன்றில் தோன்ற மன்றினால் நியாயமான சந்தர்ப்பம் தரப்படுகிறது. தவறினால் மன்று முற்றான தீர்வைப்பதிந்து தகுதியான சட்டநடவடிக்கையை மேற்கொள்ளும் எனவும் அறிவித்தல் விடப்படுகிறது.

வரைபு -
இரா.சரவணபவானந்தன்,
சட்டத்தரணி,
பூநகரி/கிளிநொச்சி.

ப.திருக்குமார்,
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
மன்னார், ஜெயபுரம்.

(சி.12890)

மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு
வடக்கு~கிழக்கு மாகாணசபை
வடக்கு~கிழக்கு சமுதாய மீளமைப்புஅபிவிருத்தி விரிவாக்கற் திட்டம்
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆ.அ.வ" கடன் இல.2084-SRI (SF)

# கேள்வி அறிவித்தல் 03

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01 வடக்கு-கிழக்குசமுதாயமீளமைப்பு அபிவிருத்தி விரிவாக்கற திட்ட(NECORD-Extension) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னகத்து தொழில் தருனராகக் குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கேள்விகோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்வி பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | KN/NECORD-EXT/AG/02 | பரந்தனில் நெல் ஆராய்ச்சிநிலையம் மீளமைப்பு | M5 | 110,000/= |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு தரவுப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

II) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD உடன் M5 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்படவேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

IV) இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI) கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

04 மேற்படி பந்தி2இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமையவேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.

05 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிகத் தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்), மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள மாவட்ட பிரதித்திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல: 021 228 5734, தொலைநகல்:- 021 228 5735, மின்னஞ்சல்:- knnecord @ sltnet.lk

06 கேள்வி ஆவணங்களை 04.10.2005 திகதியிலிருந்து 11.10.2005 திகதிவரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000/=த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்திக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

07 கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் II குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

08 அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, நிகொட் கருத்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 18.10.2005 திகதி பி.ப 1.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09 ஒப்பந்தக்காரர்களுக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று 11.10.2005 திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

10 கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்க மாட்டார்.

தி.இராசநாயகம்,
தலைவர், மாவட்ட கேள்விச் சபை,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.12940)

# அகில இலங்கை ரீதியான தடகளப் போட்டி

## தமிழர் தாயக வீரர்கள் மேலும் பதக்க வேட்டை



கொழும்பில் நடைபெற்று வரும் அகில இலங்கை ரீதியான பாடசாலை களுக்கிடையிலான தடகளப் போட்டி களில் தமிழர் தாயகத்தைச் சேர்ந்த பல வீர, வீராங்கனைகள் பதக்கங்களை சுவீகரித்து தாயகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களுக்கு தமிழீழ விளையாட்டுத்துறை பாராட்டுத் தெரி வித்துள்ளது.

நேற்று நடைபெற்ற 400 மீற்றர் போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவன் சகாயரட்ணராஜா நிரஞ்சன் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

இவர் 400 மீற்றர் தூரத்தை 49.41 வினாடிகளில் ஓடி முடித்து முத லிடத்தைப் பெற்று தங்கம் வென்றார்.

இவரைவிட திருகோணமலை மாவட்டம் சென் ஜோசப் கல்லூரி மாணவன் கே. ரி.எம். ஹாரிஸ் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண் கலப்பதக்கத்தைப் பெற்றார்.

இவர் 49. 56 வினாடியில் குறிப்பிட்ட தூரத்தை ஓடி முடித்து மூன் றாம் இடத்தைப் பெற்றார்.

மகளிருக்கான உயரம் தாண்டுதலில் திருமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவி தர்மகுலசிங்கம் நிசாந்தி வெண்கலப்பதக்கம் வென்றார்.

இவர் 1.52 மீற்றர் உயரம் தாண்டி மூன்றாம் இடத்தைப்பெற்றார். இதில் தங்கம் வென்ற நிரஞ்சன் அண்மையில் தென்கொரியாவில் நடைபெற்ற இளை யோருக்கான மதங்களுக்கிடையிலான சமாதான விளையாட்டு விழாவில் தங்கம் வெள்ளிப் பதக்கங்களை வென்று தமிழர் தாயகத்துக்கு பெருமை சேர்த்தமை குறிப்பிடத்தக்கது.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த கே.ரி.எம். ஹாரீஸ் தாயகத்தின் சிறந்த வீரர்களில் ஒருவராவார். இவர் இவ் ஆண் டின் ஆரம்பத்தில் தமிழீழ விளை யாட்டுத்துறையால் கௌரவிக்கப் பட்டார். இவர் மொரோக்கோவில் நடைபெற்ற இளையோர் விளையாட்டு விழாவிலும் கலந்து கொண்டு தாயகத்துக்கு பெருமை சேர்த்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஈட்டி ஏறிதல் போட்டியில் சீவரெத் தினம் தாரணி வெள்ளிப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் லெப். அகிலன் ஞாபகார்த்த மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை ஆதரவுடன் மாவீரர் லெப். அகிலன் ஞாபகார்த்தமாக உதிக்கும்திசை விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வுகள் கடந்த 28 ஆம் திகதி கழக மைதானத்தில் இடம்பெற்றது. பிற்பகல் 3.00 மணியளவில் ஆரம்பமாகிய நிகழ்வில் பொதுச் சுடரினை புதுக்குடியிருப்பு பிரதேச பொறுப் பாளர் பிறையாளன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை முல்லைத்தீவு அரசியல்துறைப் பொறுப் பாளர் செல்வம் ஏற்றி வைத்தார். பின் கழகக் கொடியினை கழகத் தலைவர் தங்கச்செல்வன் ஏற்றிவைத்தார். லெப். அகிலனின் திருவுருவப்படத்திற்கு அகிலனின் தாயாரான திருமதி ரஞ்சன் நாகேஸ்வரி ஈகச் சுடரினை ஏற்றி வைத்தார். மாவீரரின் திருவுருவப் படத்திற்கு கழக செயலாளரான தமிழின்பன் மலர் மாலையை அணிவித்தார். பின் அகவணக்கம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து சுமார் 4.00 மணியளவில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகின. முதல் போட்டியாக முல்லைத்தீவு சென்யூட்(பி) அணியினருக்கும் புது. விக்னேஸ்வரா (பி) அணியினருக்கும் இடம்பெற்றது. சென்யூட் அணியினர் 3-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டினார் கள். அடுத்த போட்டியாக முள்ளியவளை வித்தியா (பி) அணியினருக்கும் சிலாவத்தை இளம்பறவை அணியினருக்கும் இடையில் இடம்பெற்றது. இதில் வித்தியா அணியினர் 6-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டினார்கள். போட்டி தொடர்ந்து நடைபெறுகின்றது.









தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஏற்பாட்டில் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கிளி. முல்லை மாவட்ட சிறுவர் இல்ல மாணவர்களின் விளையாட்டு நிகழ்வு நேற்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மேற்படி விளையாட்டுப் போட்டியில் சொஞ்சோலை, புனித பூமி, காந்தரூபன் அறிவுச்சோலை, இனியவாழ்வு இல்லம், குருகுலம், ஆரோ பணம், தொழிற்கல்வி நிறுவகம், நவஜீவனம், பாரதி இல்லம் ஆகிய சிறுவர் இல்லங்கள் பங்குபற்றின. இதில் முட்டி உடைத்தல், ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டி, கிறீஸ் மரம் ஏறுதல், வினோத உடைப் போன்ற காட்சிகளைப் படங்களில் காணலாம்.

(படங்கள் : சோதி)

# உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள்

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறு வர் பாதுகாப்பு நிதியமும் இளையோர் செயற் பாட்டு நிறுவனமும் இணைந்து சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் சிறுவர்களுக்கான நிகழ்வொன்றை நடத்தியுள்ளது. இந்நிகழ்வு வடமராட்சி கிழக்கில் 17 இடங்களிலும், முல்லைத்தீவில் 13 இடங்களிலும் நடை பெற் றன. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவி யின் கீழ் இளையோர் செயற்பாட்டு நிறுவனம் அமைத்துக் கொடுத்த விளையாட்டு மைதானங் களில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ் வில் அனைத்து சிறுவர்களும் பங்குபற்றும் வகையில் விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெற்றன. இதில் முயல் பாய்ச்சல், பலூன் உடைத்தல், பந்து பரிமாறல் போன்ற நிகழ்வு கள் இடம்பெற்றன.

# அரும்புகள் பயிலரங்க கால்பந்து சுற்றுப்போட்டி நாளை ஆரம்பம்

கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறு வனத்தினால் நடாத்தப்படும் அரும்புகள் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று நாளை மருத நகர் சந்திரன் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

13, 15 வயதுப் பிரிவு அணிகள் கலந்து கொள்ளும் இச்சுற்றுப்போட்டியில் 13 வயதுப் பிரிவில் உருத்திரபுரம் மகாவித்தியாலய அணி, காந்தரூபன் அறிவுச்சோலை அணி, அரும்புகள் அணி என்பன போட்டியிடவுள்ளன.

15 வயதுப் பிரிவில் உருத்திரபுரம் ம.வி. வட்டக்கச்சி ம.வி., பளை மத்திய கல்லூரி அணிகள் ஒரு குழுவாகவும்,

ஆரோபணம், காந்தரூபன் அறிவுச்சோலை, அரும்புகள் அணி என்பன இன்னொரு குழுவாகவும் மோதுகின்றன.

லீக் முறையில் நடைபெறும் இச்சுற்றுப் போட்டி புள்ளி அடிப்படையில் இறுதிப் போட்டிக்கு அணிகள் தெரிவு செய்யப்படுவதுடன் வெற்றி பெறும் அணிகளுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில் களும் வழங்கப்படவுள்ளன.

# பைந்தமிழ் வி.கழகம் நடாத்தும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டி

பிரதேச மாவீரர்கள் நினைவாக ஆனைவிழுந்தான் பைந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் இரண்டாம் நாள் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

பிரேமா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலாவது போட்டியில் கிருஸ்ணபாரதி அணியும், இரண்டாவது போட்டியில் சோலை அணியும், மூன்றாவது போட்டியில் கனகபுரம் அணியும் நான்காவது போட்டியில் நியூஸ்ரார் அணியும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின.

நேற்று முன்தினம் ஆரம்பமான மேற்படி சுற்றுப்போட்டியில் அன்றையதினம் நான்கு போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.







(படங்கள் : செ. பிரகாஷ்)

வடமராட்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் மங்கல விளக்கினை நிறுவர் பாதுகாப்பு நிதிய மாவட்ட முகாமையாளர் அலைக்சாந்திரா ஏற்றி வைப்பதையும், இளையோர் செயற் பாட்டு நிறுவன திட்ட இணைப்பாளர் ரங்கன் நிகழ்வின் இறுதியில் சிறுவர்களுக்கான பரிசுப் பொதிகளை வழங்குவதையும், இந் நிகழ்வில் பங்குபற்றிய சிறுவர்களின் ஒரு தொகுதியினரையும் படத்தில் காணலாம்.




# மீண்டும் மனைவியுடன் இணைவேன் சாதனை பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன்



மனைவியுடன் மீண்டும் இணைவேன் என்று அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி தொடரை கைப்பற்றினாலும் இன்னும் உலகில் அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணிதான் சிறந்த அணியாகும் என்பதில் சந்தேகமில்லை. எங்கள் அணி நீண்ட நாட்களாக உள்ளூர் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் எல்லா நாடுகளுக்கு எதிராகவும் வெற்றி பெற்று இருக்கிறது. நீண்ட நாட்களாக நாங்கள் சிறந்த அணி என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள்.


எனது மனைவி சிமோனுடன் மீண்டும் சேருவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. தனியாக பிரிந்தாலும் நாங்கள் இருவரும் இன்னும் நண்பர்களாக தான் இருக்கிறோம். எப்பொழுதும் பேசிக்கொள்வோம். அதேநேரத்தில் இருவருக்கும் என்ன தேவை என்பதை கலந்து ஆலோசிக்க வேண்டும். எந்த பாதையில் இருவரும் செல்லவேண்டும் என்பதை பேசித் தீர்மானிக்க வேண்டும் என வோர்ன் கூறியுள்ளார்.

# கங்குலி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தது தவறான செயல் – கிரிக்கெட் முகாமையாளர்



அண்மையில் இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் குறித்து அணித் தலைவர் சௌரவ் கங்குலி ஊடகங் களுக்குக் கருத்து வெளியிட்டமை தவ றான செயலென இந்தியக் கிரிக்கெட் அணியின் முகாமையாளர் தெரிவித் துள்ளார். இதைத் தவிர சௌரவ் கங்குலி அணித்தலைவர் பதவியி லிருந்து விலக வேண்டுமென அணியின் பயிற்றுவிப்பாளர் கிரேக் சப்பல் தெரிவித்தமைக்கு வலுவான காரணங்களும் சாட்சியங்களும் இருந்ததாகவும் அவர் கூறியுள்ளார். இந்த விடயம் குறித்து தாம் தலையிட்டு பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்ப்பதற்கு முயற்சித்ததாகவும் ராகுல் ராவிட்டுடனும் இது குறித்து கலந்துரையாடியபோது அவரும் இவ்வாறான கருத்தையே கொண்டிருந்ததாகவும் இந்திய அணியின் முகாமையாளர் கூறியுள்ளார். இதேவேளை, தற்போது எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கமைய சௌரவ் கங்குலி தொடர்ந்தும் அணித் தலைவர் பதவியில் நீடிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சிந்தனைக்கு



நாம் ஒரு சத்தியஇலட்சியத்தில் பற்றுக் கொண்டு உறுதிகொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால், எந்தவொரு சக்தியாலும் எம்மைஅசைக்கவோ அழிக்கவோ முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 02.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## அங்கீகரித்தேயாக வேண்டும்.

வவுனியாவில் யூலை மாத இறுதியில் நடந்த தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனம் தொடர்பான பேராளர்கள் மாநாட்டில் இருந்து யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பொங்குதமிழ்– 2005 நிகழ்வு வரையில் தமிழர் தாயகத்தில் நிகழ்ந்துள்ள எழுச்சி நிகழ்வுகள் தமிழ் மக்கள் தமது விடுதலைக்கும், தன்னாட்சி அதிகாரத்திற்கும் ஓரணியில் திரண்டுள்ளனர் என்பதையே பிரகடனம் செய்தன. இந்நிகழ்வுகள் சிறிலங்கா அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் சில விடயங்களைத் தெளிவாகவே கூறியுள்ளன எனின் மிகையாகாது.

இதில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் திரண்ட இலட்சக்கணக்கான மக்கள் தமது சுயநிர்ணயஉரிமையைச் சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இத்தகைய கோரிக்கை ஒன்றை முன்வைப்பது இதுதான் முதற்தடவை அல்ல. ஆயினும் இம்முறை இக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ள முறை, சூழ்நிலை அரசியல் முக்கியத்துவம் மிக்கதாகும்.

சுமார் ஐந்து தசாப்த காலமாகத் தமது உரிமைகளைக் கோரிவரும் தமிழ் மக்கள் மிகப்பெரும் எழுச்சி நிகழ்வுடன் கூடியதாகத் தமது கோரிக்கையை முன்வைத்திருப்பதானது–இது அறிக்கை வடிவிலானதொன்றாகவோ, பேச்சளவிலானதொன்றாகவோ முன்னெடுக்கவில்லை என்பதை உணர்த்தும் வகையிலான செயற்பாடே ஆகும். அடுத்ததாக இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்விற்கான சூழ்நிலை சிங்கள அரசியல் வாதிகளால் குழப்பத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலையில் இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் சர்வதே சமூகம் தமிழ்மக்களின் இக் கோரிக்கைகளை எந்தளவிற்குக் கருத்திற்கொள்ளப்போகின்றது என்பதைத் தற்பொழுது கூறிவிடமுடியாது. ஏனெனில் சர்வதேச அரசுகள் தமது அரசியல் நிலைப்பாட்டை மக்களின் உணர்வுகளின் அடிப்படையில்– அவற்றிற்கு மதிப்பளித்து மேற்கொள்வதாக இல்லை.

அரசுகளுக்கு இடையிலான உறவுகள் பரஸ்பர நலன்பேணும் நடவடிக்கைகள் என்பனவற்றின் அடிப்படையிலேயே அவை தமது உறவுகளை மேற்கொள்கின்றன. இவ்விடயத்தில் சனநாயகம், மனிதனின் அடிப்படை உரிமைகள், மனிதாபிமான நடவடிக்கைகள் என்பனவையெல்லாம் இரண்டாம் பட்சமானவையே. சில சமயங்களில் அவை கண்களுக்குக் கூடத் தெரிவதில்லை.

ஆனால் ஒடுக்கப்படும் மக்கள் குரலுக்குச் செவிசாய்க்காது எடுக்கப்படும் தீர்மானங்கள் எவற்றையும் நீண்டகாலத்திற்கு விரும்பியோ விரும்பாமலோ தக்கவைத்துக்கொள்ள முடிவதில்லை. இதுவே கடந்தகால வரலாறாகும். அதிலும் விழிப்புணர்வு கொண்டு போராடும் இனங்களின் கோரிக்கைகளை இலகுவில் புறந்தள்ளி விடமுடியாது. அவ்வாறு புறந்தள்ளினும் கூட அவற்றைப் போராடும் இனங்கள் எதிர்காலத்தில் வெற்றிகொண்டுவிடும்.

ஏனெனில் உரிமைக்காக நீண்ட போராட்டத்தை நடத்தும் மக்கள் உறுதியானதொரு அமைப்பையும், தீர்க்கதரிசனம் மிக்க தலைமையையும் கொண்டிருப்பது ஒன்றும் ஆச்சரியப்படத்தக்கதொரு விடயம் அல்ல. அத்தகையதொரு அமைப்போ, தலைமையோ இல்லாத இடத்து இன்று தமிழ் மக்களின் போராட்டத்தைச் சர்வதேசத்தின் பார்வைக்குக்கொண்டுசென்றிருக்கமுடியாது. ஆகையினால் இம் மக்களின் உரிமைக்கோரிக்கைகள் மறுக்கப்படுமானால் அவர்கள் தமது உரிமைக்கான போரைக் கைவிட்டு அடங்கிப் போவார்கள் என யாராவது கருதுவார்களேயானால் அது தவறாகும்.

இதேவேளை தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்குச் சர்வதேச சமூகம் உடனடியாக அங்கீகாரம் வழங்கிவிடும் எனவும் எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஆனால் சர்வதேசசமூகம் இன்று ஏற்றுக் கொள்ளாததை பின்னரும் ஏற்றுக்கொள்ளாது என்பதற்கில்லை. காலப்போக்கில் தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தங்கள் காரணமாக இவ் ஆட்சிஅதிகாரத்தை வழங்கவேண்டிய கட்டாயம் உருவாகும் என்பதை துணிந்து கூறிவிடமுடியும்.

ஆனால் தமிழ் மக்கள் சர்தேச நாடுகளிடம் தம்மை அங்கீரிக்குமாறு கோரிக்கை விடுக்கையில் சில நாடுகள் தமிழ் மக்களின் உரிமைக்கான கோரிக்கையை நிராகரிப்பது போன்று தமிழ் மக்களின் உரிமைக்காகப்போராடும் அமைப்பு மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முனைவதும் உண்டு. இது தமிழ்மக்களின் போராட்டத்தை மழுங்கடிப்பதற்கான செயற்பாடாகவே கொள்ளத்தக்கதாகும்.

இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் கொடுக்கப்படும் அழுத்தம், நிர்ப்பந்தம் என்பவற்றால் தமிழ்மக்கள் தமது உரிமைப் போராட்டத்தைக் கைவிட்டுவிடுவார்கள் என்றோ, ஏனையவர்களின் நிபந்தனைகளுக்குட்பட்டு தீர்மானங்களை மேற்கொள்வார்கள் என்றோ எதிர்பார்ப்பது தவறாகும்.

ஏனென்ில் போராடும் அமைப்பிற்கு மக்களின் ஆதரவும், அரவணைப்பும் இருக்கும் வரையில் எத்தகைய சக்தியாலும் அதனைத் தோற்கடித்துவிடமுடியாது. ஏனெனில் போராடுவதற்கு உள்ள நியாயப்பாடும், அரசியலுமே போராட்டத்தை நிலைநிறுத்துகின்றன. இந்த நிலையில் சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறை நீடிக்கும் வரையில் அதாவது தமிழ்மக்கள் விடுதலைபெறும் வரையில் போராட்டம் தொடர்வது தவிர்க்க முடியாமல் இருக்கும். இந்நிலையில் இப்போராட்டத்தை ஒரு நாள் உலகம் அங்கீகரித்துத்தான் ஆகவேண்டும்.




# தற்போதைய அரசியல் யாப்பின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது

## -எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒப்புதல்

(கொழும்பு)

சிறிலங்காவின்தற்போதைய அரசியல் யாப்பின் கீழ் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணமுடியாது என்று ஐக்கியதேசியக் கட்சியின் சனாதிபதிவேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இறுதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மக்கள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும். முன்னதாக புதிய அரசியல் யாப்புக்காக இது பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். அப்போது எழும்பிரச்சினைகளைத் தீர்க்க சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பு அவசியமானது. இதற்காக சுதந்திரக்கட்சியின் ஆதரவைக் கோருவதுடன் அமைச்சரவையிலும் அவர்களது பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டின் கல்வி நிலை மோசமாக உள்ளது.சில பகுதிகளில் நல்ல பாடசாலைகள் இல்லை.பணி முடிந்து திரும்புகிறவர்களுக்கு உரிய போக்குவரத்து வசதி இல்லை. கிராமப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் வகையில் வேலை வாய்ப்பின்மை பிரச்சினை உள்ளது. இவை எல்லாம் ஓரிரவில் நடந்து விடப்போவதில்லை. ஆனால் மக்கள் அனைவரும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.

அந்த நம்பிக்கை இருந்தால் தற்போதைய நிலைமையை நாம் மாற்றிவிட முடியும். நாட்டிற்கு பிரகாசமான எதிர்காலம் இருப்பதாகவே நான் உணருகிறேன். அதற்கான சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. நாம் நிச்சயமாகஇந்த நாட்டை மாற்றியமைக்க முடியும். வருவாயை விட விலை உயர்வு அதிகரித்துக் கொண்டிருப்பதை கட்டுப்படுத்துவோம்.

குழந்தைகளுக்கு பாடசாலைகளில் மதிய உணவு வழங்கப்படுகிறது. பள்ளிக்குச் செல்கிற குழந்தைகளுக்குத் தான் இந்த உணவு கிடைக்கிறது.அனைத்து சிறுவர்களும் பள்ளிக்குச் செல்கிற வகையில் பெற்றோர்களுக்கு உதவ ஒரு தொ கையை வழங்க நாங்கள் நடவ டிக்கை மேற்கொள்வோம்.

ஒரு கிலோ அரிசி 34 ரூபாவுக்கும், நெல் 17 ரூபாவுக்கும், கிடைக்கும் வகையிலும் உரங்கள் உரிய விலைக்கு கிடைக்குமாறு நாங்கள் நடவடிக்கை மேற்கொள்வோம்.

நாடு ஐந்து பொருளாதார மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்துக்கான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

எனது நிர்வாகத்தில் திறமையற்ற அமைச்சர்கள் என்று யாரையேனும்கருதினால் அவர்கள் பதவிநீக்கம் செய்யப்படுவார்கள் அமைச்சர்களையும் நீக்[illegible] அதிகாரத்துடன் கூடிய அரச[illegible] துக்கான நல்ல நிர்வாக சபை[illegible] உருவாக்குவோம்.

அதேபோல் அரசியல் கட்சி[illegible] வேட்பாளர்களைத் தெரிவு [illegible] தற்காக தேசிய அரசியல்ஆலோ[illegible] ஒன்றையும் நாங்கள் உருவ[illegible] உள்ளோம். பிரேமதாச ஆட்[illegible] காலத்தில் அமைக்கப்பட்டது போ[illegible] தேசிய கணக்குத் தணிக்கை ஆணையம் உருவாக்கப்பட்டு பொது நிதிகள் முறையான வழியில் பயன்படுத்துவதை உறுதி செய்வோம். ஊழல் முறைகேடுகளை ஒழிப்போம் என்றார்.

# கனியவளம் பல்தேசிய கம்பனிக்கு விற்பனை; நாடுமுழுவதும் எதிர்ப்பிற்கு முஸ்தீபு

(கொழும்பு)

எப்பாவலை பொசுபேற்று கனியவளத்தை பல்தேசிய நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுவதை எதிர்த்து நாடு முழுவதும் எதிர்[illegible] நடவடிக்கைகளை முன் [illegible]டுக்க வெகுசன அமைப்புக்கள் [illegible]யாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பொசுபேற்று கனியத்தை பாதுகாக்கும் குழுஉட்பட வெகுசன அமைப்புக்கள் இந்த விடயம் தொடர்பாக விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டன. அண்மையில் சனாதிபதி சீன அரசாங்கத்துடன் பொசுபேற்று கனியவளம் குறித்து ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டதாக ஊடகங்கள் வாயிலாக தெரிய வந்துள்ளதாக இந்த அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

பாரிய செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதன்மூலம் பொசுபேற்று கனியவளம் அழிந்து போகக் கூடுமெனபொசுபேற்று கனியவளத்தை பாதுகாக்கும் குழுவின் தலைவர் மாஹமங்கடவல பியரத்னதேரர் தெரிவித்தார். இந்த செயற்பாடு பிரதேசத்தின் மக்களி[illegible] வாழ்க்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்[illegible] மென அவர் சுட்டிக்காட்டியுள்ளா[illegible]

இந்த விடயம் தொடர்பாக கூ[illegible] மைப்புஅரசாங்கத்திற்கு தெ[illegible] படுத்தியுள்ளதாகவும் அவர் குற[illegible] பிட்டுள்ளார். சீன அரசாங்கத்துட[illegible] சனாதிபதியினால் கைச்சா[illegible] திடப்பட்ட ஒப்பந்த விபரங்களை மக்கள் முன்வைக்கவேண்டு[illegible] எனவும் பியரத்ன தேரர் மேலும் தெ[illegible] வித்துள்ளார்.

# தேர்தலில் மகிந்தவை ஆதரித்ததால் ம.ம .மு நிர்வாகச் செயலாளர் நீக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்த மலையக மக்கள் முன்னணியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.அருள்சாமி அக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தனது அறிக்கையி[illegible] கட்சித் தலைமையின் ஒப்புதலின்றி தன்னிச்சையாக மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கஅருள்சாமி முடிவு செய்தார் என்று சந்திரசேகரன் கூறியுள்ளார். இரு பிரதான கட்சி வேட்பாளர்களிடமும் மலைய மக்கள் முன்னணி சார்பில் 17 நிபந்தனைகளை முன்வைத்துள்ளோம். அதற்குரிய பதிலை வேட்பாளர்கள் அளித்த பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் சந்திரசேகர[illegible] கூறினார். இதனிடையே தா[illegible] கட்சியிலிருந்து நீக்கப்[illegible] குறித்து எஸ். அருள்சாமி கூறியுள்ள தாவ[illegible] மலையக மக்கள் முன்ன ணியி[illegible] தொழிற்சங்கமான மலைய[illegible] தொழிலாளர்கள் முன்னணியி[illegible] நிர்வாகச் செயலாளராக நா[illegible] இருந்தேன். அதனால் கட்சியின் நிர்வாகச் செயலாளராக கடமையாற்றி வந்தேன். தற்போது நான் என்னுடையபணியை இழந்துள்ளேன். என் பணிநீக்கத்திற்குரிய நஷ்டஈட்டை அளிக்கக் கோருவேன் [illegible]ன்று அவர் கூறியுள்ளார்.

# சர்வதேச சிறுவர், மூதாளர் தினம் வன்னிப்பிரதேசத்தில் அனுஷ்டிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச சிறுவர் தினமும் மூதாளர் தினமும் வன்னிப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று அனுஷ்டிக் கப்பட்டுள்ளது.

சர்வதேச சிறுவர், மூதாளர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட சிறுவர் இல்ல மாணவர்களின் மாபெரும் விளை யாட்டு விழாவும், மூதாளர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடை பெற்றது.

சிறுவர் இல்லங்களின் புனர் வாழ்வு அபிவிருத்தி நிறுவகப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளி, முல்லை மாவட்டங்களைச் சேர்ந்த பத்து சிறுவர் இல்லங்களின் சிறு வர்கள் விளையாட்டு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நேற்றுமாலை 5.30 மணிக்கு வெற்றீட்டிய சிறுவர்களுக்கு பரி சில்கள் வழங்கும் நிகழ்வும் மூதாளர் கௌரவிப்பு நிகழ்வும் இடம் பெற்றது.

மேற்படி சிறுவர் இல்லச் சிறார் கள் மூதாளர்களுக்கு மலர் மாலை அணிவித்து அவர்களுக்கான பரிசில் களை வழங்கி கௌரவித்தனர். அதனைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வில் வெற்றியீட்டிய சிறுவர்க ளுக்கு கிளி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் தமிழீழ விளை யாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஆகியோர் பரிசில்களையும் வெற்றிக் கிண்ணங்களையும், வழங்கிக் கௌரவித்தமை குறிப்பி டத்தக்கது.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள் பெண்கள் அபிவிருத்திப புனர்வாழ்வு நிறுவனத்தின் பராமரிப்பின் கீழ் இயங்கி வருகின்ற செந்தளிர் சிறுவர் இல்லத்தில் நடை பெற்றன. முல்லைத்தீவில் இயங்கி வந்த இவ் இல்லம் ஆழிப் பேரலை அனர்த்தத் தினால் பாதிக்கப்பட்டு முற்றாக அழிந்ததோடு சில இல்லச் சிறார்களும, பணியாளர்களும், உயிர் நீர்த் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது வள்ளிபுனத்தில் அமைந்துள்ள செந்தளிர் சிறுவர் இல்லத்தில் மு.ப10.00 மணியளவில் ஆரம்பமாகிய இந் நிகழ்வில் உருவப் படங்களுக்கு சுடரேற்றி மலர் மாலை அணிவித்து அகவணக்கம் செலுத் தப்பட்டது. தொடர்ந்து பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறு வனத்தினரால் இல்லச் சிறார்களுக்கு மலர்மாலை அணிவித்து பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

சிறுவர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு கரையோரப் பிரதே சத்தில் உள்ள முன் பள்ளிகளில் சிறுவர்தின நிகழ்வுகள் நேற்று சிறப்புடன் நடைபெற்றன.

இதில் சிலாவத்தை குஞ்சன் முன்பள்ளியில் காலை 10.00 மணிக்கு முன்பள்ளி சிறார்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் பா.நாகரஞ்சினி தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது. (சோ,20)





# எரிபொருள் விலையேற்ற அடிப்படையிலேயே இலங்கையின் வரவு -செலவுத்திட்டம்

## - நிதியமைச்சர் சரத்அமுனுகம

(கொழும்பு)

இலங்கையில் எதிர்கால வரவு செலவுத்திட்டம், எரிபொருள் விலை யேற்றத்தின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுமென நிதியமைச்சர் சரத் அனுமுகம தெரி வித்துள்ளார்.நியூயோர்க்கில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் மாநாட்டில் பங்கேற்ற பின்னர் நேற்று நாடு திரும்பிய அவர்இந்தக் கருத்தை வெளியிட்டார்.நவம்பர் மாதமளவில் எரிபொருளின் விலை குறையுமென பலரும் எதிர்பார்க்கின்றனர்.

எனினும் எரிபொருள் விலை யில்குறைப்பை ஏற்படுத்துவது என்பது இயலாத காரியமென அவர் குறிப்பிட்டார்.

இலங்கை போன்ற நாடுகளில் எரி பொருள் சுத்தரிக்கரிப்பில் முறை யான செயற்பர்டுகள் கடைபிடிக்கப்படவில்லை

எனவே நாட்டின் 25 வீத எரிபொருள் தேவையை கூட பூர்த்தி செய்ய முடியாதுள்ளது என சரத் அமுனுகம குறிப்பிட்டார்.இந்த நிலையில் எரிபொருளின் விலை யேற்ற யதார்த்தத்திற்கு மக்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

# கொஸ்கொட பிரதேசத்திலிருந்து பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் கொஸ்கொட பிரதேசத்திலிருந்து பெருமளவு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள் ளன.

சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் சிலருக்குக் கிடைத்த தகவலைய டுத்து கொஸ்கொட மஹாபிட்டிய பிரதேசத்திலுள்ள வெதுப்பகத்தை யும் வீட்டையும் சோதனையிட்டனர்.

அந்த வீட்டிலிருந்து இராணு வத்தினர் பயன்படுத்தும் 4 கைக் குண்டுகள் ,30,ரி-56 ரக தோட்டக் கள்,9 மில்லிமீற்றர் தோட்டக்கள் 19, எஸ்.எல்.ஆர்.ரக தோட்டாக்கள் 4,84, பைகால் ரக துப்பாக்கி உட்படபல ஆயுதங்கள கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.இவர் கொலைச் சம்பவம் தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்டவர் எனத் தெரிய வந்துள்ளது.

# சு.க ,ஜே.வி.பி ஆதரவாளர்கள் 1200 பேர் ஐ.தே.க வில் இணைவு

(கொழும்பு)

மாத்தறை மாவட்டத்தின் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும் ஜே.வி.பி யினதும் ஆதரவாளர்கள் 1200 பேர் நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தனர்.

ரணில் விக்கிரமசிங்க மற்றும்உபதலைவர் கரு ஜெயசூரியவின் தலைமையில் இவர்கள் நேற்று முன்தினம் காலை ஐக்கியதேசிக் கட்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவித்து தங்களை அக்கட்சியில்இணைத்துக் கொண்டதாக அவர்கள் கூறினார்.

# தேர்தல் அறிக்கை வெளியிடப்படும் வரை முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவை வெளியிடாது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் ...டமைப்பின் தேர்தல் அறிக்கை ...ளியிடப்படும் வரை தங்கள் கட்சி ...ந வேட்பாளரை ஆதரிக்கும் என்ற ...த்தியோக பூர்வ அறிவிப்பு ...ளியிடப்பட மாட்டாது என்று ...லங்கா முஸ்லிம் காங்கிரசின் ...சிய அமைப்பாளர் கே.எம்.பாயில் ...றினார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ...யற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு ...க்கப்பட்டதாக அவர் கூறினார்.

தமது கட்சியின் முக்கிய உறுப்பினர், கிளை உறுப்பினர்கள் என சுமார் 1,600 பேருடனும், பாராளு மன்ற மாகாண சபை உறுப்பினர் களுடனும், பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அனைவரும் இணைந்து தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் அறிக்கையை ஆராய்ந்து வருவதாகவும், பாயில்தெரிவித்தார்.

சுதந்திரக் கூட்டமைப்பு கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியான பின் அதனையும், ஆராய்ந்து விட்டுத் தமது கட்சியின் நிலைப்பாடு பற்றி அறிவிக்கப்படும் என்று பாயில் கூறினார்.

## தற்கொலை முயற்சி

பாகிஸ்தானில் இலங்கை யுவதி ஒருவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட சம்பவம் ஒன்று இடம்பெற் றுள்ளது. கடந்த மாதம் நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டதாக பாகிஸ் தானிய தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் அவர் நேற்று மீண்டும் அவசரமாக கராச்சி தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

## விமானப்...

வென்றும் உலங்கு வானூர்திக்கு சிறிதளவு சேதமே ஏற்பட்டுள்ளதென்றும் விமானப்படைப் பேச்சாளர் அஜந்த டி சில்வா கூறியுள்ளார்.

இந்த சம்பவத்தில் எந்தவொரு விமானப்படையினரும் காயமடை வில்லை என்றும் அவர் தெரிவித்தார்.-

## ஐரோப்பிய....

உறுமய, போன்ற பேரினவாத அரசியல் கட்சிகளுக்கு அங்கீ காரத்தை வழங்குவதற்குச் சம னாகும்.

வோஷிங்டன் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளை அமெரிக்க ஏகாதிபத்திய சதி மூலம் ஓரங்கட்டியி ருக்காது விட்டால் நாட்டில் சமாதான மும், அபிவிருத்தியும் ஏற்பட்டிருக் கும். இருந்தாலும் 2002ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை போர் நிறுத்த சமாதான உடன்படிக்கைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மதிப்பளித்து கடைப்பித்து வருவது வர வேற்கத் தக்கது.

வடக்கு கிழக்கில் சிறு சிறு சம்பவங்கள் நடந்தபோதிலும், விடு தலைப் புலிகளின் தலைமைப்பீடம் என்றும், எப்போதும், போர்ப் பிரகட னம் செய்யவில்லை. இந்த உண் மைகளை ஐரோப்பிய ஒன்றியம் அறிந்திருந்தும், அறியாதது போல் நடந்து கொண்டுள்ளது.

எமக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆயினும் தமிழீழ விடு தலைப் புலிகளின் பிரச்சினை என இதை நாம் சிந்திப்போமெனில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் காலம் காலமாக இழந்து வந்த அனைத்தும் பிரயோ சனம் அற்றுப்போகலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்...

யூலை 27,2005 இல் வவுனி யாவில் தமிழ் சமூகத்தின் கல்வி மான்கள், மதத் தலைவர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள், சமூக அமைப் புக்கள், தொழிற்சங்கங்கள் என்பன வற்றை உள்ளடங்கிய பேராளர் மாநாட்டில் இந்தப் பிரகடனம் வெளி யிடப்பட்டது.

அவுஸ்திரேலிய அரசின் ஆதரவை இப் பிரகடனத்தின் பால் ஈர்க்கும் தார்மீகப் பணி புலம் பெயர் எம்மை சார்ந்ததாகும்.

இப்போது சமாதா முனைப்புக்களுக்கு அனுசரணைய உள்ளோரும் சர்வதேச சமூகத்தி உயர்பீடமான ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையும், அண்மையில் வெளியிட்ட அறிக்கை களுக்கு அவுஸ்திரேலிய அரசின் ஆதரவைப் பெறுவது எமது கடமையாகும் என அந்த அழைப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## தமிழர்....

கொடிய போர் மற்றும் கரையோரப பிரதேச கத்தோலிக்கர்கள் ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான மேய்ப்புப் பணி, மற்றும் முன்னேற்றச் செயற் பாடுகளுக்காக தமிழ்ப் பிரதேசங்களில தனித்து செயற்படுவதற்கான கோரிக்கையே பரிசுத்த பாப்பரசரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து குறித்த கோரிக்கை இலங் கையில் பாப்பரசரின் பிரதிநிதி மற்றும் கத்தோலிக்க ஆயர் சபை ஆகியவற்றின் கவனத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இந்தப் புதிய கட்டமைப்பு ஏற்றுக் கொள்ளப்படாவிடினும் யாழ்ப்பாணம், திருமலை மட்டுநகர் மற்றும் மன்னார் மறைமாவட்டங்கள் இணைந்து செயற்பட ஆலோசனைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக தமிழ் ஆயர் தரப்புக்கள் தெரிவித்துள் ளன. (27)

## வாழைச்சேனை....

(வயது 24) எனவும் அடை யாளம் காணப்பட்டுள்ளார்கள். காயம டைந்த நபர் பாலு என்றும் தெரிய வந்துள்ளது.

கொல்லப்பட்ட இருவரும் காய மடைந்த நபரும் வாழைச்சேனை பிள்ளையார் ஆலயத்தில் மின் இணைப்பு வேலைகளில் ஈடுபட்டி ருந்தவர்கள் என அப் பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
வருட சந்தா ரு300 மட்டுமே
தொடர்புகளுக்கு
இல 3 டொறிங்ரன் அவனியூ
கொழும்பு - 07
தொலைபேசி - 011 2506272
புதிய கல்விச் செல் நெறிகளை அறிந்து கொள்ள...
வாசியுங்கள் அகவிழி

விழுது
VILUTHU
ஆற்றல் மேம்பாட்டு மையம்

நமது செய்தி
Namathu Seithi

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.